# பரிபூரண ஜீவன்
# PARIPOORANA JEEVAN



## நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்

TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

November -December 2018
Volume : 58

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 6

## சிறுவர் முகாம் – திருப்பூர் மண்டலம்





## வாலிபர் முகாம் – திருச்சி மண்டலம்





## பெண்கள் முகாம் – தூத்துக்குடி, திருப்பூர், மதுரை வடக்கு, பெரியகுளம் மண்டலங்கள்















ஆசிரியரிடமிருந்து........!

# கிறிஸ்துவின் சாட்சிகள்

**நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப். 1:8)**

அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு
இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு தேவனுடய பிள்ளையும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவருக்குச் சாட்சியாக இருக்கப் பரிசுத்த ஆவியானவர் நமக்குப் பெலன் தருகிறார் (அப்.1:8). ஆதி அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ்ந்தார்கள் (அப். 3:15; 5:32; 10:39). நாம் அவருக்குச் சிறந்த மற்றும் வல்லமையான சாட்சிகளாய் இருப்பது எப்படி என்பது குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. வார்த்தை (WORDS)

இயேசு சொன்னார், "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்கை பண்ணுவேன் (மத்.10:32). பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் சுவிசேஷத்தை எப்படிக் கேள்விப்படுவார்கள்? என்று பவுல் கூறுகிறார் (ரோமர்10:14). நம்முடைய வார்த்தையின் மூலம் இயேசுவை அறிக்கைப்பண்ணுவதினால் அவருக்கு சாட்சியாக இருக்க முடியும். நாம் அவருக்காகப் பேச வேண்டும், சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (மத்.28: 19, 20). நம்முடைய வாழ்க்கையில் இயேசு செய்ததை மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கலாம். பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட்ட மனிதனிடம், "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி" என்று இயேசு சொன்னார். அதன்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம்பண்ணத் தொடங்கினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள் (மாற்கு 5:19,20). சமாரியா ஸ்திரீ சொன்ன சாட்சியினிமித்தம் அநேகர் இயேசுவின்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள் என்று வேதம் கூறுகிறது (யோவான்4:39). நாமும், நாம் பெற்ற இரட்சிப்பின் சந்தோஷம், விடுதலையை ஜனங்களுக்கு அறிவித்துச் சாட்சிகளாயிருப்போம்.

## 2. வாழ்க்கை (WALK)

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே என்று பவுல் கூறுகிறார் (2 கொரி.3:2). நம்முடைய வாழ்க்கை ஜனங்களால் வாசிக்கப்படத்தக்கத் திறந்த வேதமாக, உயிருள்ள நிருபமாக இருக்க

வேண்டும். நம்முடைய பரிசுத்த, நீதியுள்ள, நேர்மையான, மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை, கிறிஸ்துவின் சாட்சிகளாக நம்மை உலகிற்குக் காட்டும். நம்முடைய வாழ்க்கை, நம்முடைய வார்த்தைகளுக்கும் நம்பிக்கைக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று வேதம் கூறவில்லையா? (2 கொரி.5:14). ஆகவேதான் பவுல், "உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருங்கள்'' என்று கூறுகிறார் (பிலி.2:14,15). நம்முடைய வார்த்தையைப் பார்க்கிலும் நம்முடைய வாழ்க்கை நம்முடைய விசுவாசத்தை ஜனங்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறும் என்பதில் சந்தேகமில்லை. Our actions speak louder than our words என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஆபேல், நீதிமான் என்று தேவனால் சாட்சி பெற்றான் (எபி. 11:4). ஏனோக்கு தேவனுக்குப் பிரியமானவன் என்றும் (எபி.11:5), தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசன் என்றும் (அப்.13:22) சாட்சி பெற்றார்கள். கொர்நேலியு எல்லாராலும் நல்லவன் என்று சாட்சிப் பெற்றிருந்தான் (அப்.10:22). நம்முடைய வாழ்க்கை எப்படி?

### 3. நற்கிரியைகள் (WORKS)

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று இயேசு சொன்னார் (மத். 5:16). நம்முடைய நற்கிரியைகள் மூலம் நாம் தேவனுக்குச் சாட்சிகளாயிருக்கலாம். நம்முடைய நற்செயல்கள் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தும். பரலோக தேவனுக்கு மகிமையை கொண்டுவரும் (அப்.9:36-42). நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் (எபே.2:10). ஜனங்களுடைய குறைவுகளில் உதவி செய்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் இயேசுவின் உயிர்தெழுதலைக் குறித்துச் சாட்சி கொடுத்தார்கள் (அப்.4:32,33). இந்தக் கிறிஸ்துமஸ் நாட்களிலும் அதைத் தொடர்ந்தும் நாமும் ஏழை,எளிய மக்களுக்கு உதவி செய்து கிறிஸ்துவின் அன்பிற்குச் சாட்சிகளாயிருப்போம் (மத். 25:34-45). நல்ல சமாரியனைப் போல கிறிஸ்துவின் இரக்கத்தை வெளிப்படுத்துவோம் (லூக்கா 10:30-37).

### 4. நன்றி நிறைந்த ஆராதனை (WORSHIP)

நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயில் கொடுத்தார். அநேகர் அதைக் கண்டு கர்த்தரை நம்புவார்கள் என்று தாவீது கூறுகிறார் (சங். 40:3). கடினமான நேரங்களிலும் நாம் தேவனை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் துதிக்கும்போது நாம் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம். பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் கஷ்டத்தின் நேரத்தில் தேவனைத் துதித்துப் பாடினார்கள். அதன் விளைவாகப் பெரிய மாற்றங்களும் இரட்சிப்பும் உண்டானது (அப்.16:25-34). எல்லாவற்றையும் இழந்த நேரத்திலும் யோபு கர்த்தரைத் துதித்து நன்றி கூறுகிறான் (யோபு 1:21,22). கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் என்று தாவீது நெருக்கத்தின் நேரத்தில் கூறுகிறான் (சங்.34:1). கிறிஸ்துவின் சாட்சிகளாகிய நாம் சூழ்நிலையைக் கண்டு முறுமுறுக்காமல் கர்த்தருக்குள் சந்தோஷமாகவும் மனரம்மியமாகவும் இருந்து அவரைத் துதிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (பிலி.4:4-12). நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினால் நிறைந்திருக்கும்போது தேவனை அறியாதவர்கள் கர்த்தரின் வல்லமையையும் மகத்துவத்தையும் அறிந்து கொள்ளுவார்கள் (சங்.126:2, 3).

### 5. ஞானமாய் நடத்தல் (WISDOM)

இயேசு, “ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால், சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் (ஞானம்) புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்” என்று கூறினார் (மத்.10:16). கிறிஸ்துவின் சாட்சிகளாகிய நாம் ஞானமாய் செயல்படுவது அவசியம். கடினமான மற்றும் எதிர்ப்புள்ள இடங்களில் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரும்போது ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும். தைரியம், ஞானம் ஆகிய இரண்டும் நமக்குத் தேவை (2பேதுரு 1:5). “புறம்பேயிருக்கிறவர் களுக்கு முன்பாக ஞானமாக நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்தி கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக என்று பவுல் அறிவுறுத்துகிறார் (கொலோ. 4:6). ஆகவே பரிசுத்த ஆவியின் பெலத்தோடும் தேவ ஞானத்தோடும் நமது பட்டணத்திலும், தேசத்திலும் உலகமெங்கும் கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழுவோம் (அப். 1:8). இயேசுவின் ஒளியை வீசுவோம்! தேவ ராஜ்யம் கட்டுவோம்! அல்லேலூயா!

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.




தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி – 17
செல் : 94434 15484



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

"ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்" என்ற இத்தலைப்பின் கீழ் இன்றைய சபைகள் எழுப்புதலடைவதற்காக செயல்பட வேண்டிய பல ஆலோசனைகளை இந்த இரண்டாம் பாகத்திலும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## ஜெப வாழ்க்கை

ஊக்கமாய் ஜெபிக்கின்ற போதகர்கள் மற்றும் விசுவாசிகளை கொண்ட சபைகள் பாக்கியம் பெற்றவை. நல்ல ஜெப வீரர்களாகத் திகழும் பலர் இன்றும் உள்ளனர். அவர்கள் பொறுப்பு வகிக்கும் சபையில் ஜெபத்தின் வல்லமை வெளிப்படுவதைக் காணலாம். ஆனால் பெரும்பான்மையானவர்கள் பாரம்பரிய ஜெபம் மட்டுமே செய்கின்றனர். அதனால் அதிக பலன் கிடைப்பதில்லை. பல ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் எடுத்த ஒரு கணக்குப்படி சராசரியாக ஒருவர் ஒரு நாளைக்கு 3 நிமிடம் மட்டுமே ஜெபிக்கிறார். பலர் மணிக்கணக்கில் ஜெபிப்பார்கள் என்பது உண்மை. ஆனால் சராசரி ஜெபநேரம் இவ்வளவுதான். காலையில் எழுந்தவுடன் வழக்கமாய் ஜெபிக்கிற ஓர் ஜெபம். இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் ஜெபிக்கிற ஜெபம். இந்த ஜெபம் சில நிமிடங்களிலேயே முடிந்துவிடுகிறது.

### ● கருத்தான ஜெபம்

ஊக்கமாய் கண்ணீருடன் ஜெபிக்கும் ஏராளமானவர்கள் உண்டு. ஆனால் பலர் அதிக நேரம் ஜெபித்தாலும் சொன்னதையே திரும்பச் சொல்லி அப்படியே நேரத்தைக் கடத்திக் கொண்டிருப்பார்கள். நான் குறைகூறும் கண்ணோட்டத்தில் இதைக் கூறவில்லை. ஒரு மணி நேரம் ஜெபிக்கிறோம் என்ற எண்ணம் இருந்தாலும் பாரம்பரிய ஜெபத்தில் நேரம் கழிந்து விடுகிறது. எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை. (யாக்கோபு 5:17).

### ● கண்ணீர் ஜெபம்

#### அன்னாளின் ஜெபம்

வேதத்தில் கண்ணீருடன் கருத்தாய் ஜெபித்தவர்களைக் காண்கிறோம். அன்னாள் மனங்கசந்து, மிகவும் அழுது, ஜெபித்தாள். அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள் (1 சாமு.1:10,13,15).

#### எசேக்கியா ராஜாவின் ஜெபம்

எசேக்கியா மிகவும் அழுது ஜெபித்தான். கர்த்தர் அவனுக்குக் கொடுத்த பதில் : உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன் (2 ராஜா.20:3,5).

## தாவீது ராஜாவின் ஜெபம்

என் பெருமூச்சினால் இளைத்துப் போனேன்; இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி. என் கட்டிலை நனைக்கிறேன் (சங்கீதம் 6:6). கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்; என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும் (சங்கீதம் 39:12). என் அலைச்சலை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது (சங்கீதம் 56:8).

## ஜெபத்திற்கு தடையானவைகள்

### ● பாவம்

இன்று சபைகளில் ஜெபக் கூட்டங்கள் நடந்தாலும் எழுப்புதல் ஏற்படாததற்குக் காரணங்களில் ஒன்று பாவம்.

இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவு மில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59:1,2).

### ● ஒற்றுமை குறைவு, போட்டி மனப்பான்மை

பல ஊர்களிலே, பட்டணங்களிலே முழு இரவு ஜெபம், உபவாச ஜெபம் நடைபெறுகின்றன. இதிலும் போட்டி மனப்பான்மை உருவாகிறதைக் காண்கிறோம். ஒருவர் நன்றாக ஜெபம் நடத்தினால் மற்றவர்களுக்கு பொறாமை வந்துவிடுகிறது. போதகர்கள், விசுவாசிகளுக்குள்ளே இந்த தீய சுபாவம் உருவாவதால் அதிக பாதிப்பு உண்டாகிறது. ஒருவர் நடத்தும் ஜெபத்திற்கு அதிக ஆட்கள் போய்விட்டால் அடுத்தவர் போட்டிக்கு ஒன்றை ஆரம்பிக்கின்றார். ஊர் இரண்டு படுகிறது. பிசாசு மகிழ்ச்சியடைகிறான்.

பதவி ஆசையும், புகழ் ஆசையும், பாராட்டு ஆசையும் வந்துவிட்டால் ஒற்றுமைக் குறைவும், போராட்டமும் உருவாகும். இதனால் இந்தியாவின் எழுப்புதல் தடைபடுகிறது. எந்த ஊழியத்திலும் எந்தக் கூட்டத்திலும் தன் பெயர் வர வேண்டும் என்ற எண்ணமே அநேகரை வீழ்ச்சியடையச் செய்துள்ளது. நீங்கள் சண்டையும், யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள் (யாக். 4:2,3).

### ● பணத்தில் உண்மையற்ற நிலை

கர்த்தர் தரும் பணத்தில் உண்மையில்லாதவர்கள் சபைகளில் பெருகிக் கொண்டிருப்பதால் அவர்களின் ஜெபங்களால் பலனில்லாமல் போகிறது. பணத்தில் உண்மையில்லாத பாவம் இவர்களை ஆண்டு கொண்டிருக்கிறது. இவர்கள் ஜெபத்தால் எப்படி எழுப்புதல் உண்டாகும்?

இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வர வேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும், சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்க மாட்டேன். உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது. அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளைச் சுமந்து இளைத்துப் போனேன். நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு

மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள் (ஏசாயா 1:13-15,16).

## ஜெபத்திற்கு பலன் பெற என்ன செய்ய வேண்டும்?

தேவன் நம்முடைய ஜெபங்களைக் கேட்டு பலனளிப்பேன் என்று வாக்குப் பண்ணியுள்ளார்.

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவான் 14:13,14).

### ● தேவனுக்குப் பிரியமாய் வாழ வேண்டும்

நமது வாழ்க்கையை கர்த்தர் அங்கீகரிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும். நாம் அவருடைய உள்ளத்தை மகிழ்விக்க வேண்டும். நீ மிகவும் பிரியமானவன்; ஆதலால் நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது (தானி.9:23). போதகர்களே, விசுவாசிகளே! கர்த்தருக்குப் பிரியமான பேச்சு, நடத்தை, செயல், சிந்தனை, நோக்கம் இருக்கட்டும், அவர் நம்மை அங்கீகரிக்கும் அளவிற்கு நாம் நடந்து கொண்டால் நம்முடைய ஜெபம் கேட்கப்படும்.

இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது. வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது (லூக்கா 3:21,22). நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல், மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்கோபு 5:16). செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம் (நீதி.15:8), நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார் (நீதி.15:29).

இந்த வசனங்களிலிருந்து நாம் அறிந்து உணர்ந்து கொள்வதென்ன? நாம் நீதியுள்ளவர்களாய், செம்மையானவர்களுடைய, தேவனுக்குப் பிரியமானவர்களாய் வாழ்ந்து ஜெபித்தால் நமது ஜெபத்திற்கு பதில் கிடைக்கும். ஜெபத்தை வலியுறுத்தும் அளவிற்கு இந்த சத்தியம் வலியுறுத்தப்படாததால் எவ்வளவுதான் ஜெபித்தாலும் பலன் ஒன்றும் ஏற்படுவதில்லை.

### ● விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்

சிலர் கண்ணீருடன் ஜெபிக்கின்றனர். ஆனால் விசுவாசத்துடன் ஜெபிப்பதில்லை. இந்த ஜெபத்திற்கு கர்த்தர் நிச்சயம் பதிலளிப்பார் என்ற ஆழமான விசுவாசம் தேவை. ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் (மாற்கு 11:24).

### ● உறுதியும், ஊக்கமும் ஜெபத்தில் அவசியம்

ஏனோதானோ என்று ஜெபம் பண்ணாமல் மனதில் மிக உறுதியுடன், கருத்துடன் ஜெபிக்க வேண்டும். அவர்கள்... ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்.2:42).ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (ரோமர் 12:12). அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாகக் தரையிலே விழுந்தது (லூக்கா 22:44). அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார், அவனுக்காக, தேவனை நோக்கி, ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள் (அப்.12:5).

● **உபவாசித்து ஜெபிப்பது பலனுள்ளது**

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உபவாச ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் காண்கிறோம். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உபவாசித்து ஜெபித்தார். அப்போஸ்தலர்கள் உபவாசித்து ஜெபித்தனர்.

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார் (அப்.13:2,3).

அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்கும், தேவ வல்லமை வெளிப்படுவதற்கும் உபவாச ஜெபம் தேவை என்பதை நமது இரட்சகர் இயேசு கிறிஸ்து வலியுறுத்தியுள்ளார். இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார் (மத்தேயு 17:21).

## நமது சபைகளில் செய்ய வேண்டியது

ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து அவ்வப்போது பிரசங்கித்து, மக்களை ஜெப வீரர்களாக மாற்ற வழி செய்ய வேண்டும். முதலாவது போதகர் ஜெப வீரராக இருக்க வேண்டும். ஜெபிக்காத போதகர் எவ்வளவு தான் ஜெபத்தைக் குறித்து பிரசங்கித்தாலும் அது எடுபடாது.

சபைகளில் அதிகாலை ஜெபம் நடைபெற வேண்டும். சிலர் அதிகாலை ஜெபங்களை ஆரம்பித்துவிட்டு அவர்கள் போவதில்லை. அதனால் அந்த ஜெபம் ஒழுங்காய் நடைபெறுவதில்லை. சில சபைகளில் சில மாதங்கள் நடத்திவிட்டு வெகுசிலர் மட்டுமே கலந்து கொள்வதால் சோர்வடைந்து அதை விட்டுவிடுகின்றனர்.

வாரம் ஒருநாள் உபவாச ஜெபத்தை நடத்துங்கள். மாதம் ஒருமுறை முழு இரவு ஜெபம் நடக்கட்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒரு வார சங்கிலி ஜெபத்தை சபையில் ஒழுங்கு செய்து நடத்துங்கள். அதை நடத்துவதற்கான தலைவர்களை நியமியுங்கள். வருடத்திற்கு ஒருமுறை 40 நாள் உபவாச ஜெபத்தை நியமியுங்கள்.

ஜெபத்தை நடத்துவதிலே சோர்வுக்கு இடம் கொடாதிருங்கள். ஜெபம் ஓர் ஆவிக்குரிய யுத்தம். இதில் களைப்பு வரும். ஆனாலும் ஆவியில் நிறைந்து தொடர்ந்து நடத்துங்கள். விசுவாசிகளின் வீடுகளில் தினமும் காலை மாலை ஜெபம் நடக்க உற்சாகப்படுத்துங்கள்.

உங்கள் ஆலயம் தினமும் திறந்திருக்கட்டும். நல்ல ஜெபக்குறிப்புகளை அவ்வப்போது தயாரித்து பொருளுள்ள ஜெபம் ஏறெடுக்கப்பட ஆவனம் செய்யுங்கள்.

- தொடரும்.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# தவறான தொடர்புகள் - எச்சரிக்கை !

Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்
செயலாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள்

பரிபூரண ஜீவன் வாசகர்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் !

இன்றைக்கு அநேக குடும்பங்கள் உடைக்கப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம் தவறான தொடர்புகள். குடும்பத்திற்கு வெளியே நமக்கு தேவையான ஒன்றை தேட ஆரம்பிப்பது தான். அநேக பிரச்சனைகளுக்கு காரணமாக அமைந்து விடுகிறது. வேதம் கடுமையாக எச்சரிக்கிற பாவங்களில் ஒன்று விபச்சார பாவம் (Adultery). "விபச்சாரக்காரர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை" என்பதை வேதாகமம் தெளிவாக நமக்கு உணர்த்துகிறது (1கொரி. 6:9,10).

ஆண்டவரே, தான் அனுபவிக்கிற பாவத்தினால் வருகிற இன்பத்தை குறித்து கொஞ்சமாக சிந்திக்கவும். தான் ஏற்படுத்துகிற வேதனைகளை குறித்து அதிகமாக சிந்திக்கவும், அவர் கண்களை திறந்திடும் என விபச்சாரத்தில் சிக்கின தன்னுடைய கணவனுக்காக ஒரு மனைவி இப்படி ஜெபித்தார்கள்!

தவறான தொடர்புகள் ஏன் வருகிறது?. அதன் விளைவுகள் என்ன? தப்பிக்க என்ன செய்ய வேண்டும் என்பதை இங்கே கவனிக்கலாம்.

## I. தவறான தொடர்புகளுக்கான காரணங்கள்

1. ஆண்டவர் கொடுத்த கணவன் / மனைவியினிடத்தில் சரீர பிரகாரமாக, மனரீதியாக திருப்தி கொள்ளாமை (Unsatisfactory life) தான் அடிப்படை காரணம், போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தி என்பது கணவன்-மனைவிக்கிடையேயுள்ள சரீர பிரகாரமான உறவிலும் வெளிப்பட வேண்டும்.
2. தவறான சிந்தனைகள் (Sinful thoughts) சில நேரங்களில் தவறான செயலுக்கு வழிவகுத்துவிடும். யோசேப்பு தன்னுடைய சிந்தனையில் தவறு செய்யாமல் காத்துக்கொண்டதால் தான், வாய்ப்பு வரும்போது அவனால் எளிதாக விலக முடிந்தது. சிந்தனைகளை காப்பது மிகவும் முக்கியமானது. சுயகட்டுப்பாடு ஆவியின் கனிகளில் ஒன்று.
3. ஆபாச படங்களை பார்த்தல் (Use of Pornography) பல நேரங்களில் ஆபத்தாக மாற வாய்ப்புகள் அதிகம். இன்று (Internet connection) என்பது மிக மிக எளிது. பார்க்கிற ஒன்றை செய்ய வேண்டும் என்ற உந்துதலை பிசாசு கொண்டு வந்து வழிவிலக செய்கிறான்.
4. தேவையில்லாத கற்பனைகளும் (Uncontrolled fantasy). ஒரு சில நேரங்களில் காரணமாக மாறிவிடுகிறது. கணவன்/மனைவியை தவிர வேறு யாரையும் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதை வேதம் விபச்சார பாவம் என சித்தரிக்கிறது.
5. சூழ்நிலைகளின் தாக்கம் (Environmental stimulation) ஒரு காரணமாக இருக்கலாம். வேலை ஸ்தலங்களில், மற்ற இடங்களில் எதிர்பாலினரோடு நெருக்கமாக பழகுவது. அளவுக்கு மீறி பேசுவது, தொடுவது போன்ற செயல்கள் ரொம்ப ஆபத்தானவைகள். இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

6. தனிமை உணர்வு (Loneliness) கணவன் /மனைவி சரியாக ஒருவருக்கொருவர் நேரம் எடுத்து கவனிக்காமல் பேசாமல் இருந்தால் தொடர்புகள் அறுந்து, தொடர்பு எல்லைக்கு வெளியே போக வாய்ப்பிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சி பெருகிக் கொண்டே போனாலும், தனிமை உணர்வுகளும் தற்கொலைகளும் பெருகத் தான் செய்கின்றன.

7. பிசாசின் தந்திரங்களும் (Satanic Schemes) ஒரு காரணம் என்பதை மறந்து விடக்கூடாது. ஆண்டவருடைய பிள்ளைகளை திசை திருப்ப, கவனத்தை ஈர்க்க, அதிக ஈடுபாடு கொள்ள யாரோ ஒருவரை நம் வாழ்க்கையில் அவன் கொண்டு வரலாம். எப்போதும் விழித்திருக்க கடமைப்பட்டுள்ளோம். அவனுடைய தந்திரங்களை அறிந்திருப்பது மிகவும் நல்லது.

## II. விளைவுகள்

1. முதலாவதாக இந்த பாவத்தில் தொடரும்போது ஆண்டவரோடு உள்ள உறவு துண்டிக்கப்படுகிறது.
2. மனைவி-பிள்ளைகளோடு உள்ள நல்ல உறவும் பாதிக்கப்படுகிறது.
3. உணர்ச்சி ரீதியாக குற்ற மனச்சாட்சி வாதிக்க ஆரம்பித்துவிடும். பாவம் செய்யும்போது இன்பமாக இருக்கலாம். ஆனால் விளைவுகள் கொடுமையானது.
4. சமூக ரீதியாக அவமானம் பின் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
5. குடும்பத்தில் நம்பிக்கை, ஆழமான நெருக்கம் போன்றவற்றை இழக்க நேரிடும்.
6. சரீர பிரகாரமாக வியாதிகள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது.
7. பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படும். தவறான முன்னுதாரணங்களை பார்க்கிறபடியால் ஆண்டவர் மேல், சமுதாயத்தின் மேல் வெறுப்பு வரலாம்.
8. தவறான தொடர்பு மறுபக்கத்தில் உள்ள குடும்பத்தையும் சீரழிக்கும்.
9. சபை ஈடுபாடு, ஊழிய ஆர்வம், ஜெபங்கள் மங்கிவிடும்.
10. எதையும் கவனித்து செய்கிற பழக்கம் கொஞ்ச கொஞ்சமாக மறைந்து விடும்.
11. தெய்வீக சமாதானம், சுகம் போன்றவற்றை இழக்க நேரிடும்.
12. இந்த சாபம் சந்ததி, சந்ததியாக தொடரும்.
13. பயம், அவநம்பிக்கை, கோபம். சோர்வு போன்ற உணர்ச்சி ரீதியான செயல்கள் அதிகரிக்கும்.
14. விவாகரத்து என்ற நிலைக்கு தள்ளப்படலாம்.

## III. தவிர்க்க வேண்டியவைகள்

1. தவறான தொடர்பு இருக்குமென்றால், முதலாவதாக அதிலிருந்து வெளிவர ஆண்டவருடைய ஒத்தாசையை நாடவேண்டும். கிருபை நிச்சயமாக விடுபட உதவி செய்யும் (Seek God's help).
2. ஆண்டவரிடத்திலும், கணவன் /மனைவியினிடத்திலும் உண்மையாக மன்னிப்பு கேட்க வேண்டும். இந்த பாவத்தில் விழாதிருக்க உறுதியுடன் இருக்க வேண்டும் (Report genuinely and ask forgiveness).
3. வசனத்தால் உங்கள் இருதயத்தை நிரப்புங்கள். வசனத்தை பிடித்துக்கொண்டு (claim the promises) ஊக்கமாக ஜெபிக்கும்போது விடுதலை நிச்சயமாக கிடைக்கும்.
4. உங்களுடைய கணவன் / மனைவியினிடத்தில் மனரீதியாக, சரீர பிரகாரமாக நெருக்கத்தை அதிகரிக்க வேண்டும் (Cultivate intimacy with your spouse).

5. நீங்கள் பேசுவது, செய்வது போன்ற எல்லாவற்றையும் உங்கள் கணவன்/மனைவியினிடத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் (maintain openness in your relationship).

6. தேவையில்லாத படங்களை பார்த்து, ரசிப்பது போன்ற ரகசிய பாவங்களை தவிர்க்க வேண்டும் (Avoid seeing pornography).

7. எதிர்பாலரிடத்தில் பேசும்போது, பழகும்போது கண்ணியமாக இருக்க வேண்டும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும். (Maintain your dignity and be careful in your relationship with the opposite sex).

ஆண்டவர் தாமே நம்மை பாதுகாத்து அவருடைய வழியில் நம்மை நடத்துவாராக. "ஆண்டவரே விழுந்தவர்களை காப்பாற்றும். நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி காத்துக் கொள்ளும்" – ஆமென்.

---


# மத்திய வாலிபர் முகாம் 2019

நாள் : 2019 ஜனவரி 14,15,16 (திங்கள், செவ்வாய், புதன்)

இடம் : ஏ.ஜி. கேம்ப் சைட், மதுரை

கருப்பொருள் : **விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாய்...** (தீத்து 1:14)

தேவ செய்தியாளர்கள்

Rev. **D.மோகன்** (சென்னை)

Rev. **ஆபிரகாம் தாமஸ்** (சென்னை)

Rev. **ஜான் டென்னிஸ்** (புதுடெல்லி)

Rev. **ஜான்சாம் ஜாய்சன்** (நாகர்கோவில்)

**மற்றும் பல ஊழியர்கள்**

திருச்சபை வாலிபர்கள் அனைவரும் பங்குபெறுங்கள்


---

## Portraits of Jesus in John's Gospel

The Word Of God - John 1:1-18
The Son Of Man - John 2:1-11
The Divine Teacher - John 3:1-21
The Soul Winner - John 4:1-30
The Great Physician - John 5:1-9
The Bread Of Life - John 6:22-35
The Fountain Of Living Water - John 7:37-39
The Sympathetic Saviour - John 8:1-11
The Light Of The World - John 9:1-11
The Good Shepherd - John 10:1-16
The Resurrection And The Life - John 11:18-27
The King - John 12:12-19
The Humble Servant - John 13:1-20
The Great Encourager - John 14:1-31
The True Vine - John 15:1-11
The Great Gift Giver - John 16:7-15
The Great High Priest - John 17:1-26
The Model Sufferer - John 18:1-14
The Crucified King - John 19:1-18
The Resurrected Redeemer - John 20:1-18
The Friend Of The Fallen - John 21:1-19



# உயிர்மீட்சியே நமது தேவை

பாகம் : 3

**Rev. Dr. L. ஜெயபாலன்**

கொடைக்கானல்

உயிர்மீட்சி அல்லது எழுப்புதல் (Revival) என்பது ஒருவரை மறுபடியும் உயிர்ப்பிப்பதாகும். மயக்கத்தில் அல்லது இதயப் பாதிப்பில் சலனமற்று இருக்கும் ஒருவரை, ஒரு மருத்துவர் நெஞ்சை அழுத்தி உயிர்ப்பிக்கின்றார். ஆவிக்குரிய உலகில் அனலுமின்றி குளிருமின்றி இருப்பவர்களை அல்லது ஆவிக்குரிய வாழ்வில் ஒரு வெற்றி ஊடுருவலை எதிர்பார்த்து தாகத்தோடு இருப்பவர்களை, கடவுள், தமது வசனம், பரிசுத்தாவியானவர் மூலம், ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை உபயோகிப்பதாகும்.

அப்படிப்பட்டவர்கள், தனிப்பட்ட வாழ்க்கையில், தெய்வீக மகிழ்ச்சி, தொடர்ந்தேர்ச்சியாக, தேவனை ஆராதித்தல், ஜெப வாழ்க்கை, வேத வசனத்தில் வாஞ்சை, தனது சமாதானத்தைக் காத்துக்கொள்ள, தவறு செய்தவர்களிடம் ஒப்புரவாகுதல், பரிகாரம் செய்தல் (திருடின பொருளை திரும்பக் கொடுத்தல்) ஆத்துமாக்களைக் குறித்த பாரம் போன்றவைகள் காணப்படும்.

தேவன் காலாகாலங்களில் தனிப்பட்ட நபர்களைக் கொண்டு சமுதாயத்திலும், தேசங்களிலும் ஒரு எழுச்சியை உண்டு பண்ணியுள்ளார் என்பதற்கு வேதாகமத்தில் அநேக உதாரணங்களை நாம் பார்க்க முடியும். கடந்த நூற்றாண்டிலும் தேவன் ஒரு சிலரை வல்லமையாக உபயோகப்படுத்தியுள்ளார்.

## சார்லஸ் ஜி.பின்னி (Charles G. Finney)

இவர் அமெரிக்காவில் பிறந்தவர். 1821-ம் ஆண்டு தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்தார். அவர் ஒரு சட்டக் கல்லூரி மாணவராக இருக்கும் பொழுது, ஆரம்பத்தில் தனது பைபிளை வாசிக்கையில், பிறர் அவரை பார்க்க வருகையில் உடனடியாக, சட்ட நூல்கள் நடுவில் வைத்து விடுவாராம். பின்னர் அந்த பயத்திலிருந்து விடுபட்டு, வேதாகமத்தை பகிரங்கமாக, தனது நூல்களுக்கு மேல் வைத்தாராம்.

அவருக்குள்ளே பரிசுத்த தேவன் வல்லமையாய் கிரியை செய்ய ஆரம்பித்தார். சார்லஸ் பின்னி, காட்டிற்குச் சென்று பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற, தனிமையாக ஜெபிக்க ஆரம்பித்தார். கண்களை மூடி ஜெபிக்கையில், மரத்திலுள்ள ஒரு கிளை ஒடிந்து கீழே விழும் சத்தம் கேட்டு, அங்கும் இங்கும் பார்ப்பாராம். அவருக்கிருந்த பயத்தைக் குறித்து பரிசுத்தாவியானவர் உணர்த்தியதால், "இனி உலகிலுள்ள எல்லா பூதங்களும் இங்கு வந்தாலும் நான் பயப்பட மாட்டேன்" என்று வாஞ்சையுடன் ஜெபிக்கையில் கடவுள் அவரை பரிசுத்தாவியானவரால் அபிஷேகித்தார். தனது உடலில், ஆவியானவரின் வல்லமையை உணர்ந்த அந்த வாலிபன், "போதும் கர்த்தாவே போதும்" என்று ஜெபித்தாராம்.

அந்நாள் முதற்கொண்டு, வைராக்கியத்துடன் கர்த்தரின் வார்த்தையை பிரசங்கிக்க ஆரம்பித்தார். ஒரு தொழிற்சாலைக்குள் சென்றபொழுது அங்குள்ள

பெண்கள் அவரைப் பார்த்து பரியாசம் செய்தனராம். அவர் அவர்களை பாரத்துடன் உற்று நோக்கவே, ஒரு பெண் அழ ஆரம்பித்தார். அங்குள்ள நிர்வாகி, அவர்களுக்கு பிரசங்கிக்கும்படி பின்னியை கேட்டுக் கொண்டார். பிரசங்க முடிவில் அனைவரும் தங்களை இயேசுவுக்கு அர்ப்பணித்தார்களாம்.

இவருக்கு திருமணமானவுடன், ஒரு வாரத்திற்குப் பின்னர் பிரசங்கம் பண்ண சென்றுவிட்டு, ஆறு மாதங்கள் கழித்தே வீடு திரும்பினாராம். மனைவி இருந்த இடத்திற்கு 15 மைல்கள் தொலைவில் வந்து, இன்னும் 2 வாரங்கள் கழித்தே வீட்டிற்கு வந்தாராம். அவர் கர்த்தருக்காக வைராக்கியமாக இருந்தவர். அவருக்குள்ளே ஒரு அக்கினி பற்றி எரிந்து கொண்டிருந்ததாம். இவர் அநேக நூல்களையும் எழுதியுள்ளார். எழுப்புதல் போதனைகள் (Lectures on Revival), முறையான இறையியல், (Systematic Theology), சார்லஸ் பின்னியின் வாழ்க்கை சரித்திரம், எழுப்புதல் பிரசங்கங்கள் என்ற தமிழ் நூல்கள் 1970-ல் தமிழ்நாட்டில் அநேகருடைய உள்ளங்களில் எழுப்புதல் தீயை உண்டு பண்ணியது. அந்நூலால் நானும் பயன் அடைந்தேன். சார்லஸ் பின்னியின் கூட்டங்களில் அநேகர் உயிர்ப்பிக்கப்பட்டனர், பின்மாற்றக்காரர்கள் கடவுளிடம் திரும்ப வந்தனர். "அனலுமின்றி குளிருமின்றி வெது வெதுப்பாக" இருந்தவர்கள் மறுபடியும் புதுபிக்கப்பட்டனர். இதை வாசிக்கின்ற உங்கள் வாழ்க்கையிலும் பெரிய காரியங்களை தேவன் செய்வதற்கு வல்லவராக இருக்கின்றார்.

### இவான் இராபர்ட்ஸ் (Evan Roberts)

வேல்ஸ் தேசத்தில், 1878-ம் ஆண்டு ஜூன் 8-ம் தேதி பிறந்தார். அவருடைய பெற்றோர் பக்தியுள்ளவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு வேதாகமம் சிறு பிராயத்திலேயே கொடுக்கப்பட்டது. வேத வசனங்களை மனப்பாடம் செய்ய பெற்றோரால் போதிக்கப்பட்டனர். தனது தகப்பனார், சுரங்கத்தில் கையில் காயம் அடைந்ததால், மகனை பள்ளிப் படிப்பை நிறுத்தி, தனக்கு உதவி செய்ய சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். இவான் எப்பொழுதும், தனது கையில் வேதாகமத்துடன் காணப்படுவார். தனது பைபிளை சுரங்கம் இருக்கும் மலைக்கு மேலே ஒளித்து வைப்பதுண்டு, ஒருநாள் அங்கு ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டபொழுது இவருடைய வேதாகமம் மட்டும் தப்பியது. ஒவ்வொரு காலையும், சுரங்கத்திற்கு வேலை செய்ய வருபவர்களின் முன் ஒரு வசனத்தைக் கூறி, மாலை நேரத்தில், "இந்த வசனம் உங்களுக்கு எந்த சத்தியத்தை வெளிப்படுத்தியது" என கேட்பாராம்.

இளவயதில், விளையாட்டுகள், கேளிக்கைகள் போன்றவைகளில் ஈடுபடாமல், வேலை முடிந்தவுடன், வீட்டிற்கு வந்த பின்னர், ஒரு மைல் தூரம் நடந்து ஆலயத்திற்குச் செல்வாராம். தனது 13-ம் வயதில் கடவுளுடன் தனது முதல் அனுபவத்தை பெற்றாராம். சபையின் பலிபீடத்தில் "இயேசு என்ன செய்வார்" என்ற வாசகம் அவருக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாக்கியத்தின் அடிப்படையில் "நான் இயேசுவுக்காக என்ன செய்தேன்" என்று தனக்குள்ளே கேள்வி கேட்பாராம். தனது சம்பாத்தியத்தில் இசைக் கருவிகளை வாங்கினாராம். தனக்கு கொடுக்கப்பட்ட எந்த வேலையிலும், தனது பண்பிலும் சிறந்து விளங்கினார். கடவுள் மேல் உள்ள தாக்கத்தினால் ஜெபத்திலும் பரிந்து பேசுவதிலும் தனது நேரத்தை செலவழித்தார். மாலை நேரத்தில் வேத வசனத்தை இரவு உணவை உண்ணாமலே தியானிப்பாராம். அவர் ஜெபிக்கையில் மக்கள் உள்ளம் உருக

ஆரம்பித்து விடுமாம். சபை ஊழியரின் ஆலோசனையினால் முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்தார். இப்படியிருக்கையில் பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்தை தானும் தனது நண்பரும் பெற வேண்டும் என வாஞ்சித்தார். இரவில் எழுந்து 1 மணி முதல் காலை 5 மணி வரையிலும், பின்னர் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை, தினமும் 7 மணிநேரம் ஜெபத்தில் செலவழித்தார். இவருடைய மனதில் சோர்வுகளும், போராட்டங்களும் காணப்பட்டன. 1904-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் சுவிசேஷ கூட்டத்திற்கு, நண்பர் ஒருவரின் ஆலோசனையின்படி சென்றார். யோசுவா என்ற அந்த நற்செய்தியாளர், எலிசாவின்மேல் தேவனின் சால்வை வந்ததுபோல எங்கள் மேலும் வல்லமையுடன் வரவேண்டும் என பல வருடங்களாக ஜெபித்து வந்தார். "என்னை உடையும்! என்னை உடையும்!" (Bend me, Bend me) என்று யோசுவா ஜெபித்ததைக் கேட்டு, அக்கூட்டத்தில் அவ்வாறே இவரும் ஜெபிக்க ஆரம்பித்தார். தன்னை ஜெபத்தில் முழுவதுமாக ஒப்புக்கொடுத்தபொழுது தேவ அன்பின் வெளிப்பாட்டை (The Revelation of God) பரிசுத்தாவியானவர் தன்னிலும், பூமியிலும் வல்லமையாக அசைவாட வாஞ்சித்தார்.

1904-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் தேதி ஆரம்பித்த தொடர்ந்தேர்ச்சியான கூட்டங்கள் எழுப்புதல் கூட்டங்களாக அந்த சிறிய சபையில் உருவெடுத்தது. வரப்போகும் எழுப்புதலுக்கு பரிந்து பேசுபவர்களை உருவாக்குவதே இதன் நோக்கம். சிறுபிள்ளைகள் முதற்கொண்டு, அனைவரும் காலையும், மாலையும் ஜெபித்தனர். சில சமயத்தில் காலை 4.00 மணி வரை நீடித்தது. அநேகர் வெளியே வந்து காத்திருந்தனர். பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் இறங்கினார்.

இதனால் அரசியல் கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. கால்பந்தாட்ட மைதானம் வெறுமையாயிற்று, விளையாடுகிறவர்களும் வரவில்லை. நடன விடுதிகள் மூடப்பட்டன. சூதாட்டம், குடி போன்ற வியாபாரம் கலை இழந்தது. சினிமா கொட்டகைகள் மூடப்பட்டன. பலதரப்பட்ட கிறிஸ்தவ சபையாரும் இக்கூட்டங்களில் பங்கெடுத்தனர். வேல்ஸ் எழுப்புதல் கூட்டங்கள், இன்னிசைக் குழுவினர் மற்றும் இன்னிசைக் கருவிகள் இல்லாமல் நடைபெற்றன. காணிக்கை எடுக்கப்படவில்லை. பாடல் புத்தகங்கள் உபயோகிக்கப்படவில்லை. நிர்வாகக் குழுவும் இல்லை. ஆவியானவரே முழுவதுமாக பொறுப்பெடுத்தார்.

**வேல்ஸ் எழுப்புதலில் 4 காரியங்கள் காணப்பட்டன.**

1. தெரிந்த எல்லா பாவங்களையும் அறிக்கையிடுதல்.

2. இரகசியமான சந்தோஷத்திற்குரிய காரியங்களை கண்டுபிடித்தல்.

3. இயேசு கிறிஸ்துவை வெளிப்படையாக அறிக்கை செய்தல்.

4. ஆவியானவருக்கு கீழ்ப்படிந்து, அவர் விரும்புவதை நிறைவேற்ற உறுதி கூறல்.

இவான் இராபர்ட்ஸ் எழுப்புதலின் திறவுகோல்களை கண்டுபிடித்தார். இன்று தனிப்பட்டவர்கள், வாழ்க்கையில் குடும்பத்தில், சபையில் சமுதாயத்தில் ஒரு உயிர்மீட்சி தேவை! ஜெபியுங்கள்! தேசங்களுக்காக, தலைவர்களுக்காக, மக்களுக்காக பரிந்து பேசுங்கள். கர்த்தர் பின்மாறி மழையை ஊற்றுவார். நீங்களும் கர்த்தரால் உபயோகப்படக்கூடும்.

- தொடரும்.

பரிசுத்தாவியின் அபிகேஷம் பெற, குடும்ப ஆலோசனைகளுக்கு
94434 74921 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும்.



# வேதாகமத்தில் மிகச் சிறிய புத்தகங்கள்

# ஒபதியா

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

வேதாகமத்தில் அறுபத்தாறு புத்தகங்கள் உள்ளன. அவை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் எல்லாப் புத்தகங்களுமே பத்திகளாகப் (Paragraph) பிரிக்கப்பட்டிருந்தன. கி.பி.1600-ம் ஆண்டில்தான் பத்திகள் முறைப்படுத்தப்பட்டு, இன்று நம் கையில் உள்ளதுபோல் **'அதிகாரங்கள், 'வசனங்கள்'** என வடிவமைக்கப்பட்டன.

பழைய ஏற்பாட்டிலுள்ள முப்பத்தொன்பது புத்தகங்களிலும் மொத்தம் 929 அதிகாரங்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டிலுள்ள இருபத்தேழு புத்தகங்களிலும் 260 அதிகாரங்கள் உள்ளன. ஆக, முழு வேதாகமத்திலும் 1189 அதிகாரங்கள் உள்ளன.

வேதாகமத்திலுள்ள அறுபத்தாறு புத்தகங்களில் ஒரே ஒரு அதிகாரத்தையுடைய புத்தகங்கள். மொத்தம் ஐந்து: ஒபதியா, பிலேமோன், IIயோவான், IIIயோவான், யூதா. ஒரே ஒரு அதிகாரத்தையுடைய பழைய ஏற்பாட்டின் மிகச் சிறிய புத்தகம் ஒபதியா, இதில் மொத்தம் 21 வசனங்களே உள்ளன. இப்புத்தகத்தைப் பற்றி இங்கு காண்போம்.

புறஜாதி தேசமாகிய ஏதோமியர்மேல் தேவனுக்கிருந்த கோபத்தையும், அதனால் தேவ நியாயத்தீர்ப்பாய் வரவிருந்த அழிவைப்பற்றியும் தனது புத்தகத்தில் ஒபதியா என்ற தீர்க்கன் தீர்க்கதரிசனம் உரைக்கிறான்.

## ஏதோமியரும் இஸ்ரவேலரும்

ஏசாவும், யாக்கோபும் ஈசாக்கின் மக்கள். ஒரே கர்ப்பத்தில் பிறந்த இரட்டைப் பிள்ளைகள். ஏசா ஏதோமியரின் தகப்பன், இவன் நிறம் சிவப்பு. எனவே ஏதோம் என்ற பெயரும் இவனுக்கு உண்டு. இந்தப் பெயராலேயே அவனது சந்ததியினர் ஏதோமியர் என்று அழைக்கப்பட்டனர்.

ஏசாவின் சகோதரன் யாக்கோபு, பின்பு இஸ்ரவேல் என்று பெயர் மாற்றம் பெற்றான். இவன் சந்ததியினர் இஸ்ரவேல் என அழைக்கப்பட்டனர். இந்த இஸ்ரவேலருக்கு 'யூதர்' 'எபிரெயர்' என்ற பெயர்களும் உண்டு. பிறப்பதற்கு முன்பு தாயின் கர்ப்பத்திலேயே இந்தப் பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன (ஆதி.25:22). பிறப்பிலிருந்தே அண்ணன்-தம்பி பகை என உருவெடுத்து, குடும்பப் பகையாய் வளர்ந்து, பிற்காலத்தில் இவர்களிருவரும் ஏதோம், இஸ்ரவேல் என இருவேறு தேசங்களாய் உருவெடுத்தபோது, பகைமை உணர்வு மாறாமல், தேசப்பகையாய் மாறிற்று (ஆதி.25:19-34).

## ஏதோமியரின் தேசம்

இயற்கை எழில்மிக்க மலை தேசம், சவக்கடலுக்குத் தெற்கே அரேபியாவைத் தனது எல்லைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த ஏதோம் தேசம், சேயீர் மலைப்பகுதியிலிருந்தது. நீரோடைகள், ஆறுகள் மற்றும் மலைவளங்களுடன் பசுமை வழிச்சாலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. சுற்றிலும் அரண் போன்ற மலைகளின் பாதுகாப்பைத் தன்னகத்தே கொண்டிருந்தபடியால், யாரும் என்னை அசைக்க இயலாது எனப் பெருமையுடன் வாழ்ந்து வந்தனர். ஏதோமியர்,

யோராம் என்னும் யூதாவின் ராஜாவின் காலத்தில் (கி.மு.848-841) யூதா தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு சுதந்தரமாய் வாழ்ந்து வந்தனர் (2நாளா.21;8-10). இந்த காலக்கட்டத்தில் தான் பெலிஸ்தியரும், அரேபியரும் சேர்ந்து யூதா தேசத்துக்கு எதிராக படையெடுத்து வந்தனர். யூதா முறியடிக்கப்பட்டது. யூதாவின் தோல்வியைக் கண்டு ஏதோமியர் கைகொட்டி மகிழ்ந்தனர். யுத்த காலத்தில் பகைஞருக்குத் தப்பி அடைக்கலம் தேடி தங்களிடம் ஓடிவந்த யூதரைப் பிடித்து எதிரிகளிடம் ஒப்படைத்தனர். கொடூரத்தின் எல்லை இது!

## ஏதோமியரின் பிரதான பாவங்கள்

➤ தங்களது பாதுகாப்பான சூழ்நிலை குறித்த பெருமை.

➤ யூதாவின் அழிவில் அவர்களது துன்பத்தைக் கண்டு பூரித்தனர். யூதாவை எதிர்த்து வந்த எதிரிகளுடன் சேர்ந்துக்கொண்டு, தப்பி அடைக்கலம் கேட்டு தங்களிடம் ஓடி ஒளித்துகொள்ள வந்த யூதரைப் பிடித்துக் கொடுத்தனர். தேவனைவிட தங்களை உயர்த்திய பாவம், தேவ ஜனங்களை மனிதாபிமான ஈரமில்லாமல் நடத்திய கொடூரம்.

இவ்விரண்டு பாவங்களும் தேவனுக்கு விசனமாயிருந்தது. ஏதோமியரின் பாவத்தை தனது வார்த்தைகளில் ஆமோஸ் கீழ்க்கண்டவாறு தீர்க்கதரிசனம் உரைக்கிறான். “மேலும் ஏதோமியருடைய மூன்று பாதகங்களினிமித்தமும், நான் அவன் ஆக்கினையைத் திருப்பமாட்டேன். அவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து. தன் மனதை இரக்கமற்றதாக்கி, தன் கோபத்தினாலே என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டு, தன் மூர்க்கத்தை நித்திய காலமாக வைத்திருக்கிறானே.”

எசேக்கியேலும் தனது தீர்க்கதரிசனங்களில் ஏதோமியரின் பாவத்தை குறிப்பிடுகிறார் (எசே.35:15; 36:5). முழு உலகையும், சகல ஜாதிகளையும் நியாயந்தீர்க்கிற கர்த்தர், தமது நாமத்திற்காகவும் தாம் தெரிந்துகொண்ட ஜனத்திற்காகவும் வைராக்கியம் கொண்டு செயல்படுகிற தேவனாயிருக்கிறார்.

எனவே தமது தீர்க்கதரிசியாகிய ஒபதியாவுக்கு கி.மு. 840-ல் தமது தரிசனத்தைத் தருகிறார். தனது செய்தியில் :

➤ ஏதோமுக்குத் தேவதண்டனையாக அழிவு வரும்.

➤ கர்த்தரின் மக்களாகிய யூதருக்கு விடுதலை வரும்.

➤ யூதரின் பகைஞர் முறியடிக்கப்படுவர்.

➤கடைசி நாட்களில் தேவன் தமது சிங்காசனத்தை எருசலேமில் ஸ்தாபிப்பார்.

ஆகிய செய்திகளைத் தரிசித்துக் கூறுகிறார், ஒபதியா.

## இரு பிரிவுகளிலான இருபத்தொரு வசனங்கள் :

### முதல் பிரிவு : 1:1-16

1. தங்களது பாதுகாப்பான நாட்டைக் குறித்தும், அதில் கிடைத்திருந்த செல்வ செழிப்பைக் குறித்தும் ஏதோமியருக்குப் பெருமை, இதற்கான தேவ நியாயத்தீர்ப்பு வரும்; அவர்களுக்குரியவை அனைத்தும் வாரிக்கொள்ளப்படும் (1:9).

2. தேவன் ஏதோமை நியாயந்தீர்ப்பதற்கான நான்கு காரணங்கள் : (10-16). (அருவருக்கப்படும் பாவங்களாக இவற்றை ஒபதியா கூறுகிறார்).

### a) தனது சகோதரனாகிய யாக்கோபின் சந்ததியாருக்கு எதிராகச் செய்த கொடூரச் செயல்கள் (10-11).

நீ உன் சகோதரனாகிய யாக்கோபுக்குச் செய்த கொடுமையினித்தம் வெட்கம் உன்னை மூடும். நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப் போவாய், நீ எதிர்த்து நின்ற நாளிலும் அந்நியர் அவன் சேனையைச் சிறைப்பிடித்துப் போன நாளிலும், மறு

தேசத்தார் அவன் வாசலுக்குள் பிரவேசித்து எருசலேமின் பேரில் சீட்டுப்போட்ட காலத்தில் நீயும் அவர்களில் ஒருவனைப் போல் இருந்தாய்.

**b) எதிரிகள் யூதாவை அழிக்கையில் அதன்மேல் சந்தோஷப்பட்டனர் (12).**

அந்நியர் வசமான நாளாகிய அவனுடைய நாளை நீ பிரியத்தோடே பாராமலும், யூதா புத்திரருடைய அழிவின் நாளிலே அவர்கள் நிமித்தம் சந்தோஷப்படாமலும், அவர்கள் நெருக்கப்படுகிற நாளிலே நீ பெருமையாய் பேசாமலும் இருக்கிறவேண்டியதாயிருந்தது.

**c) எதிரிகள் யூதாவின் மேல் யுத்தம் செய்ய உதவினர் (13-14).**

என் ஜனத்தின் ஆபத்து நாளிலே நீ அவர்கள் வாசலுக்குள் பிரவேசியாமலும், அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் அனுபவிக்கிற தீங்கை நீ பிரியத்தோடே பாராமலும், அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் ஆஸ்தியில் கைபோடாமலும், அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழிச்சந்திகளில் நிற்காமலும், இக்கட்டு நாளில் அவர்களில் மீதியானவர்களைக் காட்டிக்கொடாமலும் இருக்க வேண்டியதாயிருந்தது.

**d) எதிர்வரும் தேவகோபாக்கினையின் நாளை மறந்து வாழ்ந்தனர் (15-16).**

## இரண்டாம் பிரிவு (17-21)

**யூதாவின் ஜனங்களுக்கு வாக்குத்தத்தமாகிய தேவனுடைய செய்தி**

**a)** தேவன் உங்களை விடுவிப்பார் (17-18).

**b)** தேவன் உங்கள் பகைஞரை முறியடிப்பார் (19-20).

**c)** கடைசி நாட்களில் தேவன் எருசலேமில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்து ஆளுகை செய்வார்.

**சரித்திரம் தரும் உண்மைகள்:**

- ஒபதியாவின் தீர்க்கதரிசனத்தின்படியே, கி.பி.100-ம் ஆண்டிற்குப்பின் ஏதோம் அழிந்து, அது இருந்த இடமும் அறியப்படாமற்போயிற்று.
- தேவன் கடைசி நாட்களில் தமது சிங்காசனத்தை சீயோன் மலையின்மேல் ஸ்தாபிப்பார் என்பதற்கு அடையாளமாக கி.பி.1948-ம் ஆண்டில் மே மாதம் 17-ம் தேதியில் இஸ்ரவேல் ஒரு தனி தேசமாக உருவெடுத்துவிட்டது.

## ஒபதியா புத்தகம் நமக்குக் கற்றுத்தரும் பிரதான போதனைகள்

- பெருமையைத் தவிர்த்து தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள்.
- மோதல் போக்கை கைவிட தேவனோடு நெருங்கி வாழுங்கள். அது, மனிதரோடும் நல் உறவைத்தரும்.
- மனித நேயத்துடன் நடந்து, கொடிய எண்ணங்களை மனதிலிருந்து எடுத்துப்போட்டு, இரக்கமற்ற செயல்களை தவிர்த்திடுங்கள்.
- சொந்த சகோதரனுக்கு உதவி செய்யுங்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கு அடைக்கலமும் ஆதரவும் தாருங்கள்.
- நமது ஒரே நோக்கமும் எதிர்பார்ப்பும், நமது இரட்சகரின் வருகையும், இவ்வுலகில் அமையப்போகும் அவரது நீதியின் ஆளுகையுமாயிருக்கட்டும்.

பழைய ஏற்பாட்டின் மிகச்சிறிய இப்புத்தகம் தரும் மிகப்பெரிய சத்தியங்களை அனுதினமும் மனதிற்கொண்டு செயல்படுவோமாக.



# மாற்றங்களை ஏற்படுத்த துணிந்திடுங்கள்

Rev. J. தேவதாசன் கலையரசன்
தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்

**சுவிசேஷ ஊழியம் பாகம் - 6**

காலங்காலமாக, சுவிசேஷ ஊழியம் என்றால் இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தை மனதில் வைத்திருப்போம். சில குறிப்பிட்ட முறைகளை வருடக்கணக்காக செய்து வருவோம். அந்த எல்லைக் கோட்டிற்குள் நின்று (Paradigms) ஏற்கனவே செய்து பழகிய சுவிசேஷ ஊழியங்களைச் செய்வது, நமக்கு எளிதாக இருக்கும். ஆனால் அதில் ஏற்படும் சவால்கள், பிரச்சனைகள், தடைகள், மாற்று ஏற்பாடு காண வேண்டிய நிர்பந்தம் போன்றவைகள் ஏற்படுத்தும் அழுத்தம், நாம் ஒரு புதிய மாற்றத்தின் எல்லைக்குள் உட்புக வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தும் (Paradigms shift). ஆனால் அப்படியொரு மாற்றத்தை புதிய விதிகளுடன், ஏற்படுத்த, செயல்படுத்த சிலருக்கே துணிவிருக்கிறது. சுவிசேஷ ஊழியத்தில் தேவைப்படும் மாற்றத்தை துணிவுடன் ஏற்படுத்தும் நபர்கள் தேவை (Paradigms shifter) அல்லது குறைந்தபட்சம் புதிய திட்டங்கள், அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தும் பட்சத்தில் அதைத் துணிந்து செயல்படுத்துபவர்கள் தேவை (Pioneers) நமது முன்னோர்கள் தவறாகவா செய்திருப்பார்கள்? என்று நினைக்கும் பழைமைவாதிகளுக்கு புதிய மாற்றங்களை ஏற்படுத்தவோ (Pilot) வழிமொழிந்து பின்பற்றவோ (Pioneer) துணிவு இருக்காது. சத்தியத்தை மாற்றவில்லை சொல்லும் முறைகளைத் தானே மாற்றுகிறோம். இக்கட்டுரையுடன் சேர்த்து எழுதப்பட்ட 6 கட்டுரைகளில் முதல் அத்தியாயத்தை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள். அதில் தற்காலத்திற்கேற்றபடி சில அணுகுமுறை மாற்றங்கள் எழுதப்பட்டிருக்கிறது. குறிப்பாக அக்கட்டுரையில் வாசித்தபடி பாரம்பரியமாக செய்துவந்த அணுகுமுறையில், தேவைப்படும் புதிய மாற்றங்களை செய்ய துணிவு கொண்டீர்களா? அடிப்பட்டாலும் உதைபட்டாலும் பழகியதில் இருந்து மாறமாட்டோம் என்று இருக்கிறீர்களா?

## I. இக்காலத்துக்குப் பொருத்தமான, அணுகுமுறை தேவை

இக்காலகட்டத்தில் நமது முந்தையகால கிராம ஊழியங்கள், தெருப்பிரசங்கங்கள், அநேக இடங்களில் எதிர்ப்பைச் சந்திக்கிறது. எதிர்ப்பு இருப்பதோடு பலன்களும் மிகக்குறைவாகவே இருக்கிறது. இதைச் செய்து பழகியவர்களே மாறத் தயாராக இல்லை. வீடுவீடாக பல வருடங்களாக கைபிரதித்தாள் விநியோகித்து வந்த பல இயக்கங்கள் கூட தங்கள் அணுகுமுறையை மாற்ற வேண்டும் என யோசிக்கத் துவங்கிவிட்டார்கள். இந்த மாற்றங்களை பயத்தின் அடிப்படையில் எடுக்கச் சொல்கிறோம், இது கோழைத்தனமானது என்று சிலர் விமர்ச்சிக்கிறார்கள். நிச்சயமாக இல்லை, இது காலத்துக்கு ஏற்ற மாற்றம் என்பதே உண்மை.

பொதுவாக மக்கள் தங்களுக்கு விருப்பமான செய்தியை மட்டுமே கேட்கிறார்கள், நம்பிக்கையான நபர்கள் மூலம் கேள்விப்படும் செய்தியையே விரும்புகிறார்கள், நம்புகிறார்கள். அப்படியிருக்க முன்பின் அறியாத நபர்கள் கூட்டமாக நின்று தெருப்பிரசங்கத்தில் பாடல்களைப்பாடி, பாவியே வா என்று

அழைப்புக் கொடுப்பது எப்படி பலன் தரும்? அதற்குப் பதிலாக நட்பு ஏற்படுத்தி, நம்பிக்கை ஏற்படுத்தி (எபி.4:2). சொல்லும் சுவிசேஷ ஊழிய முறையல்லவா பயன்தரும்?

இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை, வீடுகளைச் சந்திக்க அனுப்பினார் (லூக்கா 10:5). சமாதானப் பாத்திரனுக்கே, அதாவது ஏற்றுக்கொள்பவருக்கே சுவிசேஷம் சொல்லச் சொன்னார் (மத்தேயு 10:14). வீடுகள்தோறும் சொல்லியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை இயேசுவே ஏற்படுத்தாதபோது, இடைக்காலங்களில் ஏற்பட்ட வீடுவீடாக சுவிசேஷம் சொல்வது என்பது, இக்காலத்திற்கேற்றவாறு மாற்றம் செய்து கொள்ளலாமே. குழுவாக செல்வது, குறிப்பிட்ட நாட்களில் செல்வது காலப்போக்கில் நிகழ்வுகளாக மாறிவிடுகிறது. தற்போது இதுபோன்ற நிகழ்வுகளுக்கு பிரச்சனை ஏற்படுமாயின், ஏன் வாழ்க்கைமுறை சுவிசேஷ ஊழியத்தைச் செய்ய விசுவாசிகளுக்கு பயிற்சி கொடுக்கக்கூடாது. சுவிசேஷத்திற்கு தடையுள்ள அனைத்து நாடுகளிலும் நிகழ்வுகளாக அல்லாமல், விசுவாசிகளின் அன்றாட வாழ்க்கைச் செயலாகத்தானே சுவிசேஷ ஊழியம் நடைபெறுகிறது. ஏன் தற்கால புதிய அணுகுமுறையை கற்றுக் கொடுக்கக்கூடாது.

## II. தேசத்திற்கேற்ற, மக்களுக்கேற்ற அணுகுமுறை தேவை

சத்தியம் மாறாதது தான். ஆனால் தேசத்திற்கு தேசம், ஊழிய முறைகளில் மாற்றம் தேவைப்படுகிறதல்லவா? நமது தேசத்தில்தான் பக்தியுள்ள, சுவிசேஷத்திற்கு திறந்த மனதுள்ள மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பாக இந்து மதத்தினர் என்று நாம் நினைக்கும் மக்களில் 80% சதவீதத்தினர் பொதுவானவர்கள். 20 % சதவீதத்தினர்தான். பழைமைவாதிகள், தீவிரவாதிகள், எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் என்கிறார் **Rev.S.D.பொன்ராஜ்.** (Understanding Hinduism Page N8-2011 Edition). ஆனால் 20 சதவீதத்தினரின் கூக்குரலுக்கு ஏற்ப சுவிசேஷம் சொல்லும் அணுகுமுறையே காலங்காலமாக பின்பற்றி வருகிறோம். இதனால் 80 சதவீத மக்களின் ஆதரவையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம். உங்க சாமி, எங்க சாமி போன்ற தர்க்கங்களையும், மதவேஷ உணர்வுகளையும் ஒழித்துவிட்டு, இயேசுவின் பாடு மரணங்களை, உயிர்த்தெழுதலை மையப்படுத்தி இயேசுவே ஆண்டவர் என்ற சத்தியத்தை மாத்திரம் அறிவிக்கலாமே. அப்போஸ்தலர் பிறமார்க்கங்களை, பிறமக்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் சுவிசேஷத்தைச் சொன்னதை நாம் கற்றுக் கொள்ளலாமே (அப்.17:22-34). பழைய ஏற்பாட்டில் விக்கிரகங்களுக்கு எதிராக சொல்லப்பட்ட கண்டனங்கள் அனைத்தும் யூதர்களுக்கு அறிவுரையாக சொல்லப்பட்டது தான். புறஜாதிகளுக்கான அணுகுமுறையோ மென்மையாகவே இருந்தது (2ராஜா.5:18-19). இப்படியிருக்க ஏன் பழைய தர்க்க முறைகளையே பின்பற்ற வேண்டும்? புதிய மாற்றங்களை, அணுகுமுறைகளை யோசிக்கலாமே. குறைந்த பட்சம் அவர்களின் பண்டிகை தினங்களில் போய் தெருப்பிரசங்கம் செய்வதை நிறுத்தினாலே எவ்வளவு மாற்றம் உண்டாகும்.

## III. விசுவாசிகளைப் பயன்படுத்தும் அணுகுமுறை தேவை

சுவிசேஷ ஊழியத்தை விசுவாசிகள் தான் அறிவித்தார்கள் என்று வேதம் தெளிவாக சொல்கிறது (அப்.8:1-4). இன்றைக்கு சபைகளில் 100க்கு 15பேர் தான் சொல்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. 85 பேர் சொல்லாதது. நற்செய்தி ஊழியத்தில் ஈடுபடாது நமக்கு பெரிதாகபடுகிறதில்லை. ஏனென்றால்.... மீதம் உள்ளவர்கள் ஜெபிப்பவர்கள் காணிக்கை கொடுப்பவர்கள், நீதிமான்கள், ஆகவே எவர்களுக்கு விருப்பம் உண்டோ அவர்கள் அறிவிக்கட்டும் என நினைக்கிறோம்.

சுவிசேஷ ஊழியமே பிரதான கட்டளையென்றால், அது 12 பேருக்கு மட்டுமல்ல. 70 பேருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் உரியதுதானே. அனைவருக்கும் தானே செய்ய வேண்டும். ஜெபிக்காதவர்களை நாமே கிறிஸ்தவராக ஏற்றுக்கொள்வதில்லையே, என்றைக்கு ஜெபம் செய்வதைப்போல, ஒரு கிறிஸ்தவனின் அடையாளமாக, சுவிசேஷ ஊழியமும் கருதப்படும் நிலை வருகிறதோ அன்றுதான் நற்செய்தி ஊழியத்தின் மூலம் தேசம் மறுரூபம் அடையும். இப்போது இருக்கும் சபைகள் போதும் தேசத்தைச் சந்திக்க இப்போது இருக்கும் விசுவாசிகள் போதும் தேசத்தைச் சந்திக்க அனைவரும் பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிவோம், சொல்வோம், உமது இராஜ்ஜியம் வருவதாக என்று ஜெபிப்போம். நமது தேசம் மாபெரும் எழுப்புதலை காணட்டும். ஆமென்.

---

## ஆதி அன்பிற்கு திரும்புவோம்

ஆதியிலே கொண்ட அன்பை
பாதியிலே விட்டுச் சென்றேன்
பாவி நானும் நினைத்திருந்தேன்
ஆவி இன்னும் இருக்குதுன்னு
அக்கினியால் நிரம்பிய உள்ளம்
அவிந்து போனதை நானறியேன்
உம் சித்தம் செய்ய கலங்கின கண்கள்
என் விருப்பம் செய்ய ஏங்கினது ஏனோ
வேதமே வெளிச்சம் என்றிருந்தேன் - இருண்டபின்னும்
WhatsApp ஒளியிலே விழித்திருந்தேன்
தியாகமாய் வாழ்ந்தேன் மகிபனுக்காக
தியாகத்தை இழந்தேன் மனிதனுக்காக
விண்ணுலகம் நோக்கிய விழிகள்
மண்ணுலகம் பார்த்தது ஏனோ
இரட்டத்தனையாய் ஆசி பெற்றேன்
ஆஸ்திகளிலே மயங்கி போனேன்
பேர் சொல்லி அழைக்கப்பட்டேன்
வேர் ஊன்றி வளர மறந்துவிட்டேன்
விழிப்புடன் காத்திருந்தே தவிக்கிறேன்
ஆதி சாயலை நான் அணிய
கதி நீயே என சரணடைவேன்
மீதி ஆயுள் உமதாகட்டும்
நாடி தேடுவேன் ஆதி அன்பையே
நீதிபரா எனை ஆளும் நீயே..

Sis. J.ஓய்ஸ்சிங், பாப்பாரப்பட்டி, தர்மபுரி.

# பெற்றோர்களே! நீங்கள் தவறு செய்கிறீர்கள்!



1. போதிய தேவைகள் ஏற்படாத நிலையில் பிள்ளைகளுக்கு செல்போன் வாங்கிக் கொடுக்கிறீர்களா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

2. பிள்ளைகள் அணிய விரும்புகின்ற ஆடைகள் விஷயத்தில் ஒழுங்கு, யோக்கியமான தோற்றம் இவைகளை முன்னிறுத்தி சில வரைமுறைகளை விதிக்கவில்லையா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

3. பிள்ளைகளின் பழக்க வழக்கம், போக்குவரத்துக்கள், உறவுகள், நட்புகள் ஆகியவைகள் விஷயத்தில் உரிய கண்காணிப்புகளைச் செலுத்தவில்லையா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

4. பிள்ளைகளுக்கு உரிய வயது வரும் முன்னரே அவர்களுக்கு மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கான பயிற்சிகளைக் கொடுத்து உற்சாகப் படுத்துகிறீர்களா ***? நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

5. பிள்ளைகள் சரியான வயது நிலைகள் எட்டும் முன்பே, குடும்ப சம்பந்தமான விஷயங்களிலே எல்லாவற்றையும் பிள்ளைகளின் தேர்விற்கும், சுவைக்கும், தீர்மானத்திற்கும் விட்டுவிடுகிறீர்களா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

6. சிறு வயதிலிருந்தே பிள்ளைகள் கேட்கும் தின்பண்டங்களையும், உணவையும் அவர்கள் விரும்பியபடி கொடுத்து விடுகிறீர்களா? நீங்கள் தவறு செய்கிறீர்கள்.

7. பிள்ளைகளின் தேவைகளின் அடிப்படையைப் பாராமல் உங்கள் வசதிகளின் அடிப்படையில் தினமும் பாக்கெட் மணி (Pocket Money) தாராளமாகக் கொடுக்கிறீர்களா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

8. பிள்ளைகளின் அறையில் சினிமா நடிகர்கள், சினிமா நடிகைகள், ஆடம்பர உலகின் பிரபலங்கள் ஆகியோரின் படங்களை ஒட்டி வைத்து அலங்கரிப்பதைச் சாதாரண விஷயமாக எடுத்துக்கொள்கின்றீர்களா? ***நீங்கள் தவறு செய்கின்றீர்கள்.***

9. பிள்ளைகளின் பார்வைப்படும் இடங்களில் பணம், நகை போன்றவற்றை மறைக்காமல் போட்டு வைக்கின்றீர்களா? ***நீங்கள் தவறு செய்கின்றீர்கள்.***

10. பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மிகவும் காலதாமதமாக வரும் போது காரணம் கேளாமலும், அவர்கள் சொல்லும் காரணம் சரியானதுதானா என்று சோதிக்காமலும் அசட்டையாக விடுகிறீர்களா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

11. பிள்ளைகளோடு உட்கார்ந்து சினிமா ஆட்டம் பாட்டங்களையும், காதல் கதைகளையும், உணர்ச்சிபூர்வமாக டி.வி. யில் பார்த்து ரசிக்கின்றீர்களா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

12. பிள்ளைகளை டி.வி. பார்க்க விடாமல் துரத்தி விட்டு நீங்கள் சினிமாவையும், சீரியலையும் பார்த்து ரசிக்கின்றீர்களா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***

13. உங்கள் பிள்ளைகள் டி.வி. பார்க்கும் விஷயத்தில் போதிய கட்டுப்பாடுகளை விதிக்கவில்லையா? ***நீங்கள் தவறு செய்கிறீர்கள்.***



# சபையும், மிஷனரிப்பணியும்

Rev. ஜான் வின்ஸ்லி
இயக்குநர், தமிழ் பிரதேச மிஷனரி ஊழியங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பெந்தெகொஸ்தே தினத்தன்று எருசலேமில் சபை பிறந்தபோது முதல்நாளில் 120 பேர் 3120 பேராக பெருகினார்கள். இந்த எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வளர்ந்தது என காண்கிறோம் (அப்போஸ்தலர் 2:47). இவர்கள் எருசலேமிலேயே இருக்கவும், யூதர்கள் மத்தியில் மட்டும் ஊழியம் செய்யவும் தொடங்கினார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையை (மத்தேயு 28:18-20) மறந்து போனார்கள். அப்பொழுது கர்த்தர் சபைக்கு உபத்திரவத்தை அனுமதித்தார். இதன் விளைவாக விசுவாசிகள் எங்கும் சிதறிப்போனார்கள் (அப்போஸ்தலர் 8:1).

உபத்திரவத்தின் மூலம் கர்த்தர் தனது பிரதான கட்டளையையும், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குத் தந்தருளப்பட்டதின் நோக்கத்தையும் (அப்போஸ்தலர் 1:8) நினைவுப்படுத்தினார். ஆதிசபை எருசலேமின் எல்லைகளைக் கடந்து, யூதேயா. சமாரியா, பூமியின் கடைசி பரியந்தம் என்று முதல் நூற்றாண்டிலேயே பரவி பெருகினதை அப்போஸ்தல நடபடிகளிலும், சபை சரித்திரத்திலும் நன்றாய் காண முடிகிறது.

எருசலேமை (தனது சொந்த ஊரும், மாநிலமும்) மட்டும் தனது தரிசனமாகவும், ஊழியமாகவும் கொண்டு செயல்படும் ஒரு சபையானது நோயுற்ற, குறையுள்ள ஒரு சபையாகவே காணப்படும்.

சபையானது சமுதாயத்திற்கு கண்களைப் போன்றது. ஆரோக்கியமான கண்கள் இரண்டு வகைப் பார்வையைக் கொண்டதாகக் காணப்படும்.

**1) கிட்டப் பார்வை; 2) தூரப்பார்வை**

இதில் ஒன்று பெலவீனப்பட்டிருந்தாலோ அல்லது இரண்டுமே பெலவீனப்பட்டிருந்தாலோ அப்படியே விட்டுவிடுவதில்லை. மாறாக, அந்த பெலவீனம் சரி செய்யப்படுவதற்கு மருந்துகளோடும், சத்துள்ள உணவுகளோடும்கூட தகுந்த கண்கண்ணாடி அணிவது வழக்கம்.

**சபைக்கு இந்த இரண்டு வகைப் பார்வையும் அவசியம் தேவை**

1. கிட்டப்பார்வை - எருசலேம் பார்வை (சொந்த ஊரும், மாநிலமும்)
2. தூரப்பார்வை - யூதேயா, சமாரியா, பூமியின் கடைசி பரியந்தம் (இந்தியாவின் பிற மாநிலங்களும், அண்டை தேசங்களும், பூமியின் கடைசி பரியந்தமும்).

பிரியமானவர்களே! உங்கள் இரண்டு வகைப் பார்வையையும், பரிசோதிக்க இதோ....

## I. தூரப்பார்வை

1. மிஷனரிகளுக்காகவும், அவர்களது குடும்பம் மற்றும் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறீர்களா?
2. மிஷனரி பணி மற்றும் மிஷனரிகள் பற்றிய செய்திகள் வழங்கப்படுகிறதா?
3. மிஷனரி சரிதைகளை தேடி வாங்கி வாசித்து உற்சாகமடைகிறீர்களா?

4. மிஷனரிகளை உங்கள் பொருளாதாரத்தால் மாதந்தோறும் தாங்கி வருகிறீர்களா? எவ்வளவு கொடுக்கிறீர்கள்? எத்தனை மிஷனரிகளைத் தாங்குகிறீர்கள்?

5. மிஷனரிப் பணித்தளங்களுக்கு நீங்கள் செல்கிறீர்களா? அல்லது செல்லுவோரை உங்கள் ஜெபத்தாலும், பணத்தாலும் தாங்கி அனுப்புகிறீர்களா?

6. நமது தேசத்தின் இரட்சிப்புக்காகவும், நலனுக்காகவும் ஜெபிக்கிறீர்களா?

7. உலக நாடுகளின் விபரங்களை சேகரித்து அங்குள்ள சபைகளுக்காகவும், இரட்சிக்கப்படாதவர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபிப்பதுண்டா?

8. இஸ்லாமிய தேசங்களுக்காக ஜெபிக்கிறீர்களா?

## II. கிட்டப்பார்வை

1. உங்கள் சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும் தினமும் ஜெபிக்கும் பழக்கமுண்டா?

2. உங்கள் சபை ஊழியங்களில் பங்குபெறுகிறீர்களா? என்னென்ன ஊழியங்களில் பங்குபெறுகிறீர்கள்?

3. பிறருக்கு சுவிசேஷம் அறிவிக்கிறீர்களா? அல்லது உங்கள் சாட்சியை பகிர்ந்து கொள்கிறீர்களா? தினம் எத்தனை நபருக்கு சராசரியாய் சுவிசேஷம் அறிவிக்கிறீர்கள்?

4. உங்கள் பகுதியில் ஊழியம் நடைபெற சபைக்கு கொடுக்க வேண்டிய தசமபாகம், காணிக்கைகளை உண்மையாய்க் கொடுக்கிறீர்களா?

5. கடந்த ஓராண்டில் எத்தனை புது நபர்களை உங்கள் சபைக்கு அழைத்துச் சென்றிருக்கிறீர்கள்?

6. உங்கள் சபையில் நடைபெறும் உபவாச ஜெபம், எழுப்புதலுக்கான ஜெபம், முழுஇரவு ஜெபம், அதிகாலை ஜெபம், திறப்பின் வாசல் ஜெபம் போன்ற ஜெபங்களில் பங்குபெறுகிறீர்களா?

7. உங்கள் சபை ஆராதனைகளிலும், ஐக்கியங்களிலும் (ஆண்கள், பெண்கள், வாலிபர், மாணவர்) தவறாமல் பங்குபெறுகிறீர்களா?

உங்களுடைய எந்தப் பார்வையில் பெலவீனம் இருக்கிறது என்பதை கண்டுபிடித்து சரிசெய்வீர்களா?

“.... நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்” (வெளிப்படுத்தல் (3:18).

## மிஷனரி ஊழிய அறிக்கை

### மிஷன் கன்வென்ஷன்கள்

கடந்த ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சாத்தூர், சிவகங்கை, தாம்பரம் சென்ட்ரல், புதுவாழ்வு ஏ.ஜி சபை- சென்னை, சீர்காழி, நாகர்கோவில், பெரியகுளம், புதுசிருஷ்டி ஏ.ஜி சபை - சென்னை, அம்பா சமுத்திரம், ஈரோடு, கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய மண்டலங்களில் மிஷன் கன்வென்ஷன்கள் நடைபெற்றது. மண்டலத் தலைமைப் போதகர்களின் ஒத்துழைப்போடுகூட அந்தந்த மண்டல மிஷன் பொறுப்பாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

### மிஷன் பிரயாணங்கள்

கடந்த ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நமது தமிழ் பிரதேச

போதகர்கள், குடும்பமாக, சபையாக, மண்டல போதகர்களாக, பிராந்திய வாரியாக, மணிப்பூர், உத்தரகாண்ட், பஞ்சாப், இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், சத்தீஸ்கர், ஜார்கண்ட், சிக்கிம், மேற்கு வங்கம், அஸ்ஸாம், அருணச்சல பிரதேசம், நாகலாந்து, மேகாலயா ஆகிய மாநிலங்களிலும், இலங்கை, பூட்டான் போன்ற அண்டை நாடுகளுக்கும் சென்று 12 மணி நேர ஜெபங்கள் நடத்தி, அங்குள்ள சபைகளையும், ஊழியர்களையும் சந்தித்து உற்சாகப்படுத்தி வந்துள்ளனர்.

## ஜெப விண்ணப்பங்கள்

- நமது தமிழ் பிரதேசத்திலிருந்து தாங்குகிற சுமார் 605 மிஷனரிகளின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட, ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்க.
- மிஷன் பணித்தளங்களுக்கென்று சொந்த இடம் வாங்க, சபைகள் கட்டப்படுவதற்கான பணத் தேவைகள் சந்திக்கப்பட.
- மிஷன் இயக்கத் தலைவர்கள், பிராந்திய மற்றும் மண்டலத் தலைவர்களுக்காக.
- மிஷன் பணித்தள வளர்ச்சி பணிகளுக்காக.
- கோவா, உத்தரபிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீரில் ஊழியம் செய்கிற மிஷனரிகளின் குடும்பங்களுக்காகவும், சபைக்கு விரோதமான தடைகள் விலகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### டார்ஜி மக்களினத்திற்காக ஜெபியுங்கள்

**மக்கள் இனம்** : டார்ஜி

**மொழி** : ஹிந்தி

**மக்கள் தொகை** : 29,79,000

**கிறிஸ்தவர்கள்** : 0.00%

**நம்பிக்கை** : ஒரு மனிதன் நல்ல வாழ்க்கை வாழ்ந்தால், அவனது ஆத்துமா மறுபிறவியில் உயர்நிலையில் பிறக்கும், தீமையான வாழ்க்கை வாழ்ந்தால், அவனது ஆத்துமா மறுபிறவியில் கீழ் நிலையில் பிறக்கும்

**அதிகம் வாழும் பகுதி** : குஜராத், ராஜஸ்தான்

**தத்தெடுத்துள்ள மண்டலம்** : திருநெல்வேலி

## மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள்

**1. நிர்மல், மஸி, அசாந்த், ஹரியானா** : கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. எங்களது சபை கடந்த 2015-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை சுமார் 25 பேர் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். இந்த 2018ம் ஆண்டின் மட்டும் இதுவரை 18 பேர் மூழ்கி ஞானஸ்நானம் பெற கர்த்தர் உதவி செய்தார். புதிய ஆத்துமாக்களை தேவன் சபைக்கு தந்து கொண்டிருக்கிறார். கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த மிஷனரியை தாங்கும் சபை : **Rev. A. ஆபிரகாம் தாமஸ்**, அண்ணாநகர், ஏ.ஜி சபை, சென்னை.

**2. சஞ்சய்குமார், லெஹரா, பஞ்சாப்** : எங்கள் ஊழியத்தின் மூலம், ஜலூர், கண்டுவா, புடால் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக ஊழியத்தை ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். இந்த பகுதியில் ஊழியத்தை ஆரம்பிக்கும்போது மிகுந்த கலக்கம்

உண்டாயிற்று. ஏனென்றால் இப்பகுதியில் வாழும் ஜனங்களில் அநேகர் ஜமீன்தார் (உயர்குல சீக்கியர்கள்) குடும்பத்தை சேர்ந்தவர்களாயிருந்தார்கள். ஆனால் தேவன் அற்புதம் செய்தார். இப்பொழுது 20 புதிய நபர்கள் தேவனை விசுவாசித்து சபையில் சேர்ந்துள்ளனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

இந்த மிஷனரியை தாங்கும் சபை : **Rev. K. மணிராஜ்,** மாதவரம், வில்லிவாக்கம், சென்னை.

தேசத்திற்காகவும், மிஷனரிப் பணிக்காகவும் ஜெபிப்பதற்கு ஜெபக் குறிப்புகளை குறுந்தகவலாக SMS தினமும் உங்கள் மொபைலில் பெற, உங்கள் மொபைல் எண்ணிலிருந்து பெயர், வயது, ஊர், SMS பெற விரும்பும் மொழி ஆகிய விபரங்களை 86106 63214 என்ற எண்ணிற்கு SMS செய்யுங்கள்

மாதந்தோறும் ஒரு மிஷனரியைத் தாங்குவதற்கு குறைந்தபட்சம் ரூ.4000/- கொடுக்க முன்வரும் தனிநபர், குடும்பம் அல்லது சபைகள் தேவை.

**எதிர்பாருங்கள்!**

**பிரமாண்டமான மாநில மிஷன் கன்வென்ஷன் - 2020**

- 300 மிஷனரிகள் பிரதிஷ்டை
- 300 தாங்கும் சபைகள்
- 100 மிஷனரிகளுக்கு மோட்டார் சைக்கிள்
- இன்னும் பல

**கருப்பொருள் : ..... பூமியின் கடைசி பரியந்தம்.... அப்போஸ்தலர் 1:8**

---


தேவனுக்கே மகிமை

**தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட் வழங்கும்**




**TV நிகழ்ச்சி**

பாருங்கள்! பயனடையுங்கள் !!

தமிழன்

**தொலைக்காட்சியில்**

வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

**தேவ செய்தி அளிப்பவர்கள்**

**Rev.P.S. ராஜமணி, Rev.D.மோகன், Rev.A.ஆபிரகாம் தாமஸ்**

பிரதேச தலைவர்கள் மற்றும் மண்டல தலைமை போதகர்கள்

**Contact : Rev. I. Christudas, Director, Department of Evangelism & Church Planting**
Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009



# நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் அதிகமாக கிரியை செய்யக்கூடிய வல்லமையுள்ளவர்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

நாம் வேண்டிக் கொள்வதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபேசியர் 3:20,21).

நம்முடைய தேவன் நாம் நினைப்பதைவிட நாம் கிரியை செய்வதைவிட மிகவும் அதிகமாக செயல்படுகிறவர். நம்முடைய அறிவுக்கும் நம்முடைய ஞானம், பெலன் எல்லாவற்றிற்கும் மேலாக கிரியை செய்கிறவர். இயேசு கிறிஸ்து தான் வாழ்ந்த நாட்களிலே 3 இடங்களிலே மனிதன் நினைத்துப் பார்க்கமுடியாத எதிர்பாராத வேளையிலே 3 பேரை உயிரோடு எழுப்பினார்.

முதலாவதாக லூக்கா 7:11-15-ம் வசனங்களிலே நாம் வாசிக்கும்போது அங்கே நாயீன் ஊர் விதவையின் மகன் மரித்து பாடையிலே கொண்டு வருகிறார்கள். அவள் தன் மகன் வாலிப பிராயத்திலே மரிப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த திடீர் இழப்பை தாங்கிக் கொள்ளமுடியாமல் மிகவும் துக்கத்தோடு வேதனையோடு அவள் கண்ணீரோடு அழுதுகொண்டு வந்தபொழுது இயேசு கிறிஸ்து குறுக்கிடுகிறார். அந்த விதவையைப் பார்த்து அழாதே என்றார். இன்றைக்கும் இயேசு அந்த விதவையைப் போல எல்லாராலும் கைவிடப்பட்டு கண்ணீரோடு இருக்கிறவர்களுக்கு ஆறுதலை கொடுக்கிறார். பாடையைத் தொட்டார். சிறிதுநேரத்தில் அந்த வாலிபனை அடக்கம் செய்து விடுவார்கள். ஆனால் அதற்குள்ளாக யாரும் எதிர்பாராத வேளையில் இயேசு அந்த பாடையைத் தொட்டு வாலிபனே எழுந்திரு என்றார். அவன் உடனே எழும்பினான். யாரும் இதனை எதிர்பார்க்கவில்லை. ஆனால் இயேசு அந்த விதவையின் கண்ணீரைக் கண்டு ஒரு அற்புதம் செய்தார். அதுபோல நம்முடைய வாழ்க்கையிலும் நாம் எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத சூழ்நிலையில் இழப்புகள் வரும்பொழுது தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் அதிகமாக தேவன் அற்புதம் செய்வார்.

லூக்கா 8:41,42,49-55 ஆகிய வசனங்களிலே யவீரு என்கிற பெயருடைய ஜெப ஆலயத் தலைவனுடைய 12 வயதுள்ள மகள் மரணத்துக்கேதுவான வியாதியாயிருந்தாள். அவன் தேவன் மேல் நம்பிக்கையுள்ளவனாயிருந்தான். அவன் இயேசுவைத் தேடி வந்தான். தன்னுடைய மகளை சுகமாக்கும்படி மிகவும் தாழ்மையோடு வேண்டிக்கொண்டான். ஆனாலும் அந்நேரத்திலே அவனுக்கு ஒரு செய்தி வருகிறது. "உன் பிள்ளை மரித்துப்போனாள்" என்று. இந்த நேரத்திலே இயேசு அங்கே சென்றார். பிள்ளை மரிக்கவில்லை என்று சொன்னார். அவர்களெல்லாரும் நகைத்தார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தைக் கண்டு அவர்களை வெளியே போகச் சொன்னார். சிறு பெண்ணே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் எழுந்திருந்தாள்.

யோவான் 11:1-44 வசனத்தில் நாம் பார்க்கும்பொழுது அங்கே இயேசுவுக்கு

மிகவும் நெருக்கமான லாசரு என்பவன் வியாதியாயிருந்தான். அப்பொழுது இயேசுவுக்கு அழைப்புக் கொடுத்தார்கள். ஆனால் இயேசு வரவில்லை. வியாதி வரவர அதிகரித்து கடைசியில் அவன் மரித்துப்போனான். அவன் மரித்து 4 நாட்கள் ஆனபிறகு இயேசு வந்தார். மார்த்தாள், மரியாள் அவரைக் கண்டு கண்ணீர் விட்டார்கள். ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் மகன் மரித்திருக்க மாட்டான் என்று சொல்லி கண்ணீர் விட்டார்கள். ஆனாலும் இனி என்ன செய்ய முடியும் என்று நம்பிக்கை இழந்து போனார்கள். ஆனால் இயேசு கல்லறையின் பக்கமாக சென்று கல்லைப் புரட்டுங்கள் என்றார். அவர்கள் கல்லைப் புரட்டினால் நாறுமே என்றார்கள். ஆண்டவர் அங்கே அற்புதம் செய்வார் என்று அவர்கள் எதிர்பார்க்கவுமில்லை, நினைக்கவுமில்லை. உங்கள் வாழ்க்கையிலும் ஆண்டவர் இப்படிப்பட்ட அற்புதங்கள் செய்யவேண்டுமானால் இந்த கல்லறையை மூடியிருக்கிற கல்லை புரட்டிப்போடுங்கள் என்று இயேசு சொன்னதுபோல நம்முடைய வாழ்க்கையில் உள்ள அவிசுவாசத்தை நீக்க வேண்டும். அங்கே கல்லைப் புரட்டி போட்டபோது அங்கிருந்து நாற்றம் வரவில்லை. இயேசு கல்லறையைப் பார்த்து லாசருவே வெளியே வா என்று லாசருவை பெயர் சொல்லி அழைக்கிறார். லாசரு கட்டப்பட்ட நிலைமையிலே வெளியே வந்தான். பார்க்க முடியவில்லை. கேட்க முடியவில்லை. ஒழுங்காக செயல்பட முடியவில்லை. அவனுடைய கட்டுக்களை அவிழ்க்கச் சொன்னார். அப்பொழுது லாசரு உயிருள்ளவனாக செயல்பட ஆரம்பித்தான். ஒரு மனிதனுடைய வாழ்க்கை எப்பொழுது முடியும் என்று யாருக்கும் தெரியாது. ஆண்டவர் ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். அந்த திட்டம் நிறைவேற வேண்டுமானால் உங்கள் வாழ்க்கையில் உள்ள கட்டுக்கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும். நீங்கள் கிரியை செய்ய முடியாமல் தேவனுக்கென்று செயல்பட முடியாமல் எந்த காரியத்திலே நீங்கள் கட்டப்பட்டு இருக்கிறீர்கள்? இந்த நாளிலே அதை ஆராய்ந்து பாருங்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் 3 பேரை உயிரோடு எழுப்பினார். ஆனால் இன்றைக்கு இந்த உலகத்திலே தம்முடைய ஊழியக்காரர் மூலமாக அநேகரை உயிரோடு எழுப்பிக் கொண்டிருக்கிறார். அநேகரை தேவன் தமக்கென்று செயல்படுகிறவர்களாக நமக்கென்று வல்லமையாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். உங்களையும் பயன்படுத்த தேவனால் முடியும் விசுவாசியுங்கள் ஜெபியுங்கள். அற்புதத்தைக் காண்பீர்கள்.

---

## IN YOUR HOME

- ◈ **EXALT God**
- ◈ **EXEMPLIFY christlikeness**
- ◈ **ENCOURAGE faithfulness**
- ◈ **EDUCATE your children in God's ways**
- ◈ **ESTABLISH Godly values**





# நியாயத்தீர்ப்பு


**Rev. R. நெல்சன் ஞானகுமார்**


இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்


“அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது” (வெளி.22:11 12; 2கொரிந்தியர் 5:10).

## நியாயத்தீர்ப்பு நாள் எப்படியிருக்கும்?

**1. இரட்சிக்கப்பட்டு நிலைத்திருப்பவர்களுக்கு** (2தீமோ.4:7,8; மத்தேயு 25:21).

விருது வழங்கும் நாள் அல்லது பட்டம் பெறும் நாள் : கல்லூரியில் மூன்று அல்லது நான்கு வருடம் கஷ்டப்பட்டு படிப்பார்கள். சரியாக தூங்க முடியாது. சாப்பிட முடியாது. சிலர் குடும்பத்தோடு இருக்க முடியாது. விடுதியில் தங்கி படிப்பார்கள். கடின உழைப்பு செய்ய வேண்டும். ஏராளமான பணம் செலவழிக்க வேண்டும். சரீர பெலவீனங்கள் வரும். மணிக்கணக்காய் எழுதுவார்கள், படிப்பார்கள். பயம், சோர்வு தாக்கும். ஆனால் பட்டமளிப்பு விழா நாளின்போது பட்ட எல்லா பாடுகளையும் மறந்து மகிழ்ந்து களிகூறும் அனுபவம் ஏற்படும்.




❖ விடுதலையின் நாள்.

❖ பரிசு பெறும் நாள்.

**2.இரட்சிக்கப்படாதவர்களுக்கு** (எபிரெயர் 9:27; 1யோவான் 2:28; மத்தேயு 25:26,30,46).

❖ பயந்து நடுங்கும் நாள் ❖ வெட்கத்தின் நாள்

❖ வருத்தத்தின் நாள் ❖ அழுகையின் நாள்

❖ இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்தால் சரியாக பயன்படுத்துவேன் என இன்னொரு வாழ்க்கைக்காக ஏங்கும் நாள்.

❖ எதிர்பார்த்ததை விட மேலான தண்டனை வாங்கும் நாள்.

## நியாயத்தீர்ப்புக்காக ஆண்டவர் இப்போது செய்கிறதென்ன?

**1. ஆண்டவர் பார்க்கிறார் (God Looks) -** எபிரெயர் 4:13; வெளி.2:2

நாம் செய்கிற நன்மையானாலும் தீமையானாலும் ஆண்டவர் கண்காணித்துக் கொண்டிருக்கிறார். நாம் ஜெபிப்பதை, கொடுப்பதை, வேதம் வாசிப்பதை, ஆலயம் செல்வதை, ஊழியம் செய்வதை, தியாகம் செய்வதை, ஆராதிப்பதை, உண்மையாயிருப்பதை, சோதனைக்கு இடம் கொடாமலிருப்பதை, ஊழியக்காரரை கனம்பண்ணுவதை.... எல்லா நன்மையான காரியங்களையும் ஆண்டவர் மிக நெருக்கமாக கவனித்துக்கொண்டிருக்கிறார்.

அதே சமயத்தில் பாவஞ் செய்வதையும், ஊழியக்காரருக்கு விரோதமாய் செயல்படுவதையும், ஆலயத்தை அசட்டை செய்வதையும், அருவருப்புகளையும், சோதனைக்கு இடம் கொடுப்பதையும், மற்றவர்கள் செய்யும் பாவத்திற்கு உடன்படுவதையும்... ஆண்டவர் கண்காணித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு முன்பாக எதையும் மறைக்க முடியாது. மழுப்ப முடியாது. எல்லாம்

வெளியரங்கமாயிருக்கிறது.

**2. ஆண்டவர் பதிவு செய்கிறார் (God records) -** மல்கியா 3:16; வெளி. 20:12,15

நாம் செய்கிற நன்மையானாலும் தீமையானாலும் ஆண்டவர் பதிவு செய்கிறார். நாம் செய்வதை மறந்துவிடுவதற்கு அவர் அநீதியுள்ளவர் அல்ல (எபிரெயர் 6:10).

**3. ஆண்டவர் பலனளிக்கிறார் (God rewards) -** 2 நாளாகமம் 15:7

நாம் செய்கிற ஒவ்வொன்றுக்கும் இம்மையிலே பலன் தருகிறார். மறுமையிலும் பலனளிக்க அவர் ஆயத்தமாகிறார் (மாற்கு 10:28-30; மத்தேயு 10:41,42).

### நியாயத்தீர்ப்பு எதனடிப்படையில்?

1. கிரியைகளை நியாயந்தீர்ப்பார் (பிரசங்கி 12:14)
2. வார்த்தைகள் நியாயந்தீர்க்கப்படும் (மத்தேயு 12:36,37)
3. அந்தரங்கத்தில் செய்யப்படுவது நியாயந்தீர்க்கப்படும் (ரோமர் 2:16)
4. சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்கிறவர்களுக்கு நியாயத்தீர்ப்புண்டு (மத்தேயு 5:22).
5. தேவன் தந்த திறமைகளை, தாலந்துகளை எப்படி பயன்படுத்தினோம் என்பதன் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படும் (மத்தேயு 25:21,30).
6. கிறிஸ்துவினிமித்தம் அனுபவித்த பாடுகளுக்கு பலன் உண்டு (மத்தேயு 5:11,12;1 பேதுரு 4:12,13)
7. ஆத்தும ஆதாயத்திற்கு பலன் உண்டு (1 தெசலோனிக்கேயர் 2:19,20; தானியேல் 12:3)

### நியாயத்தீர்ப்புக்கு தப்புவிக்கப்பட என்ன செய்யலாம்?

1. ஜீவ புஸ்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்பட வேண்டும் (வெளி. 20:15). அப்படியானால் உங்கள் பாவங்கள் கழுவப்பட வேண்டும். இரட்சிக்கப்பட வேண்டும்.
2. அனுதினமும் நம்மை நாமே சோதித்து அறிய வேண்டும் (1 கொரி. 11:31; சங்கீதம் 26:2; 139:23,24).
3. முடிவு பரியந்தமும் அவருக்குள் நிலைத்திருக்க வேண்டும் (மத்தேயு 24:13; வெளி. 2:10; 1 யோவான் 2:28). மரண பரியந்தம் அல்லது இயேசுவின் வருகை பரியந்தமும் இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும்.

---

## Royal Commissions of Jesus

Here are eight Royal commands of the Lord to His servants.
Are there none of them for you?

1. Go and teach all nations - Matt. 28:19.
2. Go and preach the Gospel - Mark 16:15.
3. Go to the lost sheep - Matt. 10:6.
4. Go into the vineyard - Matt. 20:4.
5. Go into the highways - Matt. 22:9.
6. Go into the streets and lanes - Luke 14:21.
7. Go home to thy family - Mark 5:19.
8. Go and do likewise - Luke 10:37.

# நரகத்திலிருந்தும் சொர்க்கத்திலிருந்தும் குரல்கள்!

நீங்கள் என் அண்டை வீட்டிலிருந்தீர்கள் ; நீங்கள் கோவிலுக்குப் போவதைப் பார்ப்பேன். நான் குழந்தையாயிருந்தேன்; என் பெற்றோர் கடவுள்களை வழிபட பல இடங்களுக்கு அழைத்துச் செல்வர். ஒரு கருப்பு புத்தகத்தை எடுத்துச் செல்வீர்கள்; அது பைபிள் என்று பின்பு அறிந்தேன். இப்போது நான் நரகத்தில் அலறிக்கொண்டிருக்கிறேன். நீங்களோ பரலோகத்தில் மகிழ்ந்திருக்கிறீர்கள். ஏன் எனக்கு நீங்கள் மோட்சம், நரகம் குறித்து அறிவிக்கவில்லை? பல்லாண்டுகள் அயலாராக வாழ்ந்தோமே. நேரம் கிடைக்கவில்லையா? நான் எங்கு போனால் என்ன என்று நினைத்து விட்டீர்களா? எனக்கு நீங்கள் அக்கறை காட்டாமல் போனது ஏனோ, ஐயோ ஏனோ?



என் மளிகைக் கடைக்கு நீங்கள் எப்போதும் வருவீர்கள். நான் கனிவோடும் புன்முறுவலோடும் உங்களுக்கு உதவினேன். உங்கள் கடவுளைப் பற்றிச் சொன்னால் நான் எதிர்த்து விடுவேன் என்று என் முகம் காட்டியதோ?இல்லை மேடம், கடவுளைத் தேடி ஊர் ஊராகத் திரிந்தேன். ஒரு விபத்தில் உயிரிழந்து இந்தக் கொடூரமான இடத்திற்கு வந்து சேர்ந்தேன். பிசாசுகள் என்னைச் சித்ரவதைச் செய்கின்றன. உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் கடவுளைக் குறித்த துண்டுப்பிரதியையோ ஒரு புத்தகத்தையோ எனக்குக் கொடுத்திருப்பீர்களானால் நரகத்திற்குத் தப்பித்திருப்பேன். ஏன் மேடம் என்னிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டீர்கள்?

உங்களோடு கூட மூன்று மணி நேரம் ரயிலில் பயணித்தேன். நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். உங்கள் வேதத்தை வாசித்தீர்கள். உங்கள் கடவுளைக் குறித்தும் பைபிளைக் குறித்தும் அறிய குறுகுறுப்பாயிருந்தது. என்னிடம் நன்றாகப் பேசினீர்கள். உங்கள் தின்பண்டங்களைக் கூடப் பகிர்ந்து கொண்டீர்கள். ஆனால் உங்கள் கடவுளைக் குறித்துப் பேசவேயில்லை. இப்போது உங்கள் கடவுள்தான் மெய்யான கடவுள் என்று அறிந்து கொண்டேன். ஏன் நீங்கள் மதத்தைக் குறித்துப் பேசவில்லை? இப்போது நரகத்தில் எரிந்து கொண்டிருக்கிறேன். ஏன், ஐயோ, ஏன்?

டீச்சர், இரண்டு ஆண்டுகள் உங்களிடம் படித்தேன். பின்பு வேறு வகுப்பிற்குச் சென்றாலும் அவ்வப்போது உங்களைச் சந்தித்தேன். நான் பதினோராம் வகுப்பு படிக்கும்போது புற்றுநோய்க்குப் பலியானேன். ஏன் மேடம் என்னிடம் இத்தனை இரக்கமற்றவராய் நடந்து கொண்டீர்கள்? பாசமாய் எனக்குப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தீர்களே. ஆனால் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான சத்தியத்தைக் கண்டுபிடிக்க அது எனக்கு உதவவில்லையே. இப்போது புழுக்களுடன் புரளுகிறேன். நீங்கள் போகும் அழகிய இடத்தைக் கனாக் காண்கிறேன். உலகத்திலேயே மிகப்பெரிய உண்மையை மறைத்து ஏன் என்னை ஏமாற்றிவிட்டீர்கள் மேடம்? ஐயகோ, என்ன செய்வேன்?

அருமை டாக்டரே, இருதய அறுவை சிகிச்சைக்காக உங்கள் பராமரிப்பிலிருந்தேன் ஆபத்துகளை விளக்கி சில தாள்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டீர்கள்." மரணத்திற்குப் பிறகு எங்கு செல்வேன்? நரகம் உண்டா? மோட்சம் உண்டா" என்று எண்ணி என் இருதயம் நடுங்கிக் கொண்டிருந்தது. விடை உங்களிடம் இருந்தது டாக்டர். ஆனால் எனக்குச் சொல்லாமல் விட்டீர்களே. அறுவை சிகிச்சைக்கு முன்பாக இயேசுவின் பெயரில் ஒரு பெரிய இறைவனிடம் எனக்காக வேண்டுதல் கூட செய்தீர்கள். ஆனால் இந்த மாபெரும் இறைவனைக் குறித்தும் அவரது மகனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் எனக்கு நீங்கள் சொல்லவில்லையே, அவரை நம்பியிருந்தேனானால் அவர் என்னை சொர்க்கத்திற்குக் கொண்டுச் சென்றிருக்கலாமே. உங்கள் கடவுளை ஏற்றுக்கொள்ளும்படியாக ஏன் நீங்கள் என்னை நயங்காட்டவில்லை? நீங்கள் அவசரமாகச் சென்றதால் உங்களிடம் பேச பயப்பட்டேன். அறுவை சிகிச்சையின் போது மரணமடைந்தேன். ஐயோ, டாக்டர், என்னை நரகத்திற்கு அனுப்பிவிட்டீர்களே!

டாக்டரைப் பார்க்கக் காத்திருந்தபோது நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். வாழ்க்கையில் நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த என்னை, தற்கொலை எண்ணம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. இயேசுவைத் தெரியுமா என்று திடீரென்று கேட்டீர்கள். பிறகு இயேசுவை நம்பினால் சமாதானம் பெறலாம் என்றீர்கள். உங்கள் வீட்டிற்கு வந்த உங்களுடன் பேசலாமா என வினவினேன். மருத்துவரைப் பார்த்துவிட்டு வீடு திரும்ப நேரமாகும் என்றீர்கள். காத்திருக்கிறேன் என்றேன். என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றீர்கள். அங்கே முழங்காழிட்டு இயேசுவை என் இரட்சராக ஏற்றுக் கொண்டேன். வேதம் ஒன்றைக் கொடுத்தீர்கள். இப்போது தகப்பனாகிய கடவுளோடும் அவரது மகனாகிய இயேசு கிறிஸ்துவோடும் மற்ற எல்லாத் தேவ பிள்ளைகளோடும் பரலோகத்தில் இருக்கிறேன். உங்களைக் கட்டி அணைத்து நன்றி சொல்லக் காத்திருக்கிறேன். என்னிடம் பேச தைரியமாக உங்கள் வாயைத் திறவாதிருந்திருப்பீர்களானால்! இலவசமாய்க் கொடுப்பதற்கு பைபிளின் விலை அதிகமே எனக் கணக்குப் போட்டிருப்பீர்களானால்! இன்று நரகத்தில் துடித்துக் கொண்டிருப்பேன். நன்றி ஐயா, ஒரு கோடி நன்றி!

நன்றி : ஆசீர்வாதம்

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102






**Rev. லின்ஸி ஜோன்ஸ்**
(President, CA)

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசுவின் அற்புதமான நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

இன்றைய இண்டர்நெட் கலாச்சாரத்தில் மிக முக்கிய பங்குவகிப்பது முகநூல் (FACE BOOK). இது எவ்வளவு முக்கியம் என குறிப்பிட வேண்டுமானால், தேவன் மனிதனுக்கு வெளிப்படுத்திக் காண்பித்த வேதாகமத்தோடு (THE BOOK - BIBLE), செலவிடும் நேரத்தையும் ஒதுக்கிவிட்டு, தனக்கென நேரமெடுக்கும்படி வாலிபர்களை நிர்ப்பந்தித்து தன்னுள் மூழ்கும் நிலைக்கு அவர்களை நடத்திவிடுகிறது. எனவே தான் இவ்விதழில் வேதத்திற்கு “FACE (THE) BOOK” நேராக திரும்பும்படி எழுத விரும்புகிறேன்.

இவ்விரண்டையும் வித்தியாசப்படுத்தின பிறகு வேதாகமம் குறித்த சில தெளிவுகளை எழுத விரும்புகிறேன். இதில் முதலாவது சொல்லப்படும் கருத்து “நேரம் போவதே தெரியவில்லை” இந்த நிலைக்கு “FACE BOOK” எப்படி கொண்டு செல்கிறது என பார்ப்போமானால் புதிய நண்பர்கள் (Friends), புதிய பதிவுகள் (Posts), புதிய கண்ணோட்டம் (Views), புதிய கருத்துக்கள் (Ideas), புதிய சிந்தனைகள் (Thoughts) எல்லாவற்றிற்கும் மேலாக புதிய படங்கள் (Pictures)... இவற்றின் மூலமாகவே ...வேதாகமமும் இதற்கு எவ்விதத்திலும் சளைத்ததல்ல...

வேதத்தை நீங்கள் வாசிக்கும்போது மேற்கூறிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாததே வேதாகமம் ரசித்து வாசிக்கபடமுடியாமல் இருப்பதற்கு காரணமாகும். இந்நிலை நீடிக்குமானால் நாம் வேதாகமத்தை சரியாக புரிந்துகொள்ளாதது மாத்திரமல்ல, மற்றவர்கள் தவறாக புரிந்துகொள்வதற்கு காரணமாகவும் மாறிப்போகிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக வேதாகமம் உங்கள் பார்வையில் கீழ்க்காணும் விதத்தில் பரிசீலிக்கப்படுமானால், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட “Face Book” க்கை காட்டிலும், பல மடங்கு தாக்கத்தை தேவனால் கொடுக்கப்பட்ட வேதம் (Holy Book) ஏற்படுத்த முடியும்.

பின்வரும் விதத்தில் வேதத்தை ஆராய முற்படுவோமாக:-

## 1. NEW FRIENDS - புதிய நண்பர்கள்

ஒரு வேத பகுதியை வாசிக்கும்போது அதில் யார் “புதிய நபர்” என்று பாருங்கள். ஒரு நபரை அப்படி கண்டுபிடிக்கும்போது அவரின் விருப்பு, வெறுப்புகள் என்ன? அவரின் குணாதிசயம் எப்படிப்பட்டது? அவரின் பழக்கவழக்கங்கள் எப்படிப்பட்டது? அவரின் செயல்களால் தனிப்பட்ட விதத்திலும் பொதுவான வேதாகம வரலாற்றிலும் என்னென்ன தாக்கம் ஏற்பட்டது? என்பதை அறிந்து தியானிப்பது அந்நபரைக் குறித்து தெளிவாக புரிந்துகொள்ள முடியும். “Face Book”-ல் ஒரு புதிய

நபரை நண்பராக்க முடியுமே தவிர, அதை உருவாக்கிய நபரை நண்பராக்கவோ, அல்லது அறிந்து கொள்ளவோ முடியாது. ஆனால் வேதாகமத்தில் உள்ள நபர்களை அறிந்து கொள்ள முற்படும்போது அதை உருவாக்கிய பரிசுத்த ஆவியானவரையும் நண்பராக்க முடியும்.

அதுமாத்திரமல்ல, மற்ற எல்லா புத்தகங்களுக்கும் வேதாகமத்திற்கும் ஒரு மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. அது என்னவெனில், மற்ற புத்தகங்களின் ஆசிரியர்கள் சிலர் மறைந்திருக்கலாம், பலர் வாசிக்கும் வாசகரின் அருகில் வரமுடியாத தொலைவில் இருக்கலாம். ஆனால், வேதாகமத்தை ஒவ்வொரு முறை திறக்கும்போதும், II தீமோ. 3:16(A) ன்படி, அதை எழுதின ஆசிரியராகிய பரிசுத்த ஆவியானவரே நமக்கு அருகில் வந்து, நம் மனித ஞானத்தில் புரிந்துகொள்ள முடியாத அதிசயங்களை, விளக்கங்களை நமக்கு வெளிப்படுத்தி காண்பிக்க வல்லவராயிருக்கிறார். இந்த (ஆசிரியரே நேரில் வந்து விளக்கும்) விசேஷ சிலாக்கியம் வேறு எந்த புத்தகத்திற்கும் இல்லை. முக்கியமாக FACE BOOKக்கிற்கு இல்லை.

## 2. NEW POSTS - புதிய பதிவுகள்

ஒரு காரியத்தை புதிதாக அறிந்தவுடன் Post (பதிவு) செய்யும் பழக்கம் FACE BOOKல் உண்டு. இப்பதிவுக்குப் பின்னால் உள்ள பல கண்ணோட்டங்களில் முதன்மையானது Likes பெறுவது தான். அப்பதிவு எத்தனை பேருக்கு பிரயோஜனமாயிருந்தது என்பதைக் காட்டிலும், என் பதிவை எத்தனை பேர் விரும்பியிருக்கிறார்கள் என்பதே முக்கியத்துவமடைகிறது. ஆனால் வேதத்தை இக்கண்ணோட்டத்தில் பார்ப்போமானால், எத்தனை பேர் விரும்பியிருக்கிறார்கள் என்பதை காட்டிலும் எத்தனை பேருக்கு நன்மை ? என்ற கருத்தே மேலோங்கி நிற்கிறது.

உதாரணமாக வனாந்திரத்தில் தேவ வெளிப்படுத்தலை யோவான் பிரசங்கித்தபோது, அது கடினமான, வீரியமான வார்த்தையாய் இருந்தபோதும், அப்பதிவு ஜனங்களை பாவ உணர்வடையச் செய்து சரியானதை தீர்மானிக்கவே தூண்டியது. எனவே வேதாகமத்தில் நேரம் செலவிடும்போது இக்கோணத்தையும் கருத்தில் கொள்வோமானால், நம் பதிவுகள் (வார்த்தைகள்) FACE BOOK-ஐப்போல, எழுதும் நபருக்கோ அல்லது பதிவிடும் நபருக்கோ புகழ்ச்சியைக் கொண்டுவராமல் கேட்கும் நபருக்கு ஆசீர்வாதத்தையும், நன்மையையும் கொண்டு வரும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

மேற்கண்ட விதத்தில் வேதத்தை தியானிக்கும்போது நாம் "தேறினவர்களாய் மாறுவது" நிச்சயமான ஒன்றாகும்.




இதன் தொடர்ச்சி அடுத்த இதழில், அதுவரை கீழ்கண்ட இரண்டு காரியத்தை செய்ய முயற்சியுங்கள்.

1. வேதத்தில் ஒரு புதிய நபரை (இதுவரை அறிந்திராத) அறிந்து கொள்ளுங்கள்.
2. வேதத்திலிருந்து ஒரு புதிய பதிவை (இதுவரை பகிர்ந்திராத) ஒன்றை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவ தயவு நம்மை தாங்குவதாக.

## சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ



பெ. பெவிஸ்டன்
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்

ஹாய் குட்டீஸ்! எப்படியிருக்கிறீங்க? வீட்டில் எல்லாரும் நலமா? அப்புறம்.... "அண்ணா, சும்மா கேள்வி கேட்டு டென்சனாக்காம டைரக்டா கதைக்கு வாங்க"னு சிலர் சொல்லுற மாதிரி இருக்கு, ஓக்கே.... வாங்க கதைக்குள்ள போகலாம்.

விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன், ஆயிரம் முறைகளுக்கு மேல் தோல்வி கண்டு, பெரும் முயற்சிக்குப் பின் மின்சார பல்பை கண்டுபிடித்தார். ஆனால் வெற்றிக்குப் பின்னரும் அந்த "பல்பு" எடிசன் உதவியாளரால் கை தவறி உடைந்துவிட்டது. அப்போது எடிசன் எப்படி நொந்து போயிருப்பார்....?

அந்த அதிர்ச்சிகரமான நிமிடங்களில் எடிசன் பொறுமையுடன் நடந்து கொண்ட சுவாரஸ்ய சம்பவம்....

தனது நண்பர்களுக்கும், சக விஞ்ஞானிகளுக்கும் மின்சார பல்பை ஒளிர வைத்துக் காட்டுவதற்காக எடிசன், ஒரு சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார், அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

எடிசன், தனது உதவியாளரை அழைத்து மின்சார பல்பை மேல் தளத்திற்கு கொண்டு வரச் சொன்னார். பல்பை கொண்டு வரும்போது, அது கை தவறி விழுந்து உடைந்துவிட்டது. அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். உதவியாளர் என்ன செய்வதென அறியாமல் திகைத்துப் போனார். ஆனால் எடிசன் சற்றும் திகைக்கவில்லை.

ஆயிரம் தோல்விகளைச் சந்தித்து வெற்றி கண்ட மின்சார பல்பை மீண்டும் உருவாக்குவது மிக எளிதாக தான் இருக்கும் என கூறிய எடிசன், சிறிது முயற்சி செய்து ஒரு பல்பை உடனடியாக உருவாக்க ஆரம்பித்தார். வெற்றியும் கண்டார். அதனை மீண்டும் அந்த உதவியாளரிடமே கொடுத்து மேலே எடுத்துவரச் சொன்னார். அவனோ பதறினான். பரவாயில்லை, நீதான் மேலே கொண்டு வர வேண்டும் என கூறிச்சென்றார்.

பல்பை கீழே போட்டு உடைத்தவனிடமே மீண்டும் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே? என்று சிலர் எடிசனிடம் கேட்டனர்.

அதற்கு எடிசன், "உடைந்த பல்பை என்னால் மீண்டும் உருவாக்க முடிந்தது. ஆனால் அவரது மனதை காயப்படுத்திவிட்டால் அதை என்னால் சரிசெய்து கொடுத்துவிட முடியுமா? மீண்டும் அவனிடமே பணியை கொடுத்தால் அவன் தனது பொறுப்பையும், எனது நம்பிக்கையும் உணர்ந்து கூடுதல் கவனத்துடன் பணிபுரிவான். அதனால் தான் அப்படிச் செய்தேன்" என்றார்.

எடிசனுக்கு வெற்றியை பெற்றுத்தந்த நீடிய பொறுமையை அப்போதுதான் மற்றவர்கள் முழுமையாக உணர்ந்து கொண்டனர்.

அன்பு தம்பி, தங்கச்சி.... நம்மிடம் பொறுமை என்கிற விலையேறப்பெற்ற பொக்கிஷம் இருக்கிறதா? பொறுமையாயிருப்பது என்பது கோழைத்தனமல்ல, அதுதான் வெற்றிக்கான முதலீடு.

ஆறாயிரம் முறை தோல்வியடைந்த எடிசன் தனது முயற்சியை கைவிடவில்லை. இவரது முயற்சியை பலரும் ஏளனமாக பேசினார்கள். இவரோ பொறுமையாயிருந்தார். தோல்வியை கண்டு மனந்தளராமல் தேவன் மேல் நம்பிக்கை வைத்து விடாமுயற்சியுடன் இரவு பகல் உழைத்து வெற்றியும் பெற்றார்.

உன்னைச் சுற்றி ஒரு சம்பவம் நேரிட்டால் உடனே உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை அணு ஆயுதங்களாக பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, பொறுமையாக கையாள பிரயாசப்படுங்கள். நிச்சயமாக வெற்றி நிச்சயம். "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது, பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்" (பிரசங்கி 7:8).

குட்டீஸ்... இப்பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்குமென நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு SMS பண்ணுங்க... அடுத்த இதழில் சந்திப்போம்... டாட்டா.....Bye... Bye....

---

## எல்லாம் இயேசுவே

**பல துறையில் உள்ள கலைஞர்கள் இயேசுவை கீழ்கண்டவாறு வர்ணிக்கின்றனர்**

- வானசாஸ்திரம் இவரை ... விடிவெள்ளி நட்சத்திரம் என அழைக்கிறது (வெளி. 22:16)
- சமையல்கலை வல்லுநருக்கு இவர்... ஜீவ அப்பம் (யோவான் 6:18)
- தச்சர் சொல்கிறார்... இவரே வாசல் (யோவான் 10:7)
- கட்டிட தொழிலாளி... இவரே மூலைக்கு தலைக்கல் என்று அழைக்கின்றார் (எபே. 5:23)
- சபை இவரை... சபையின் தலை என்கிறது (எபே. 5:23)
- மின் பொறியாளர் இவரை... உலகின் ஒளி என்கிறார் (யோவான் 8:12)
- காட்டிலாக்கா இவரை... ஜீவ விருட்சம் என்கிறது (வெளி. 22:14)
- புவி ஆராய்ச்சியாளர் இவரை... கன்மலை என்கின்றனர் (1 கொரி.10:4)
- அரசாங்கம் இவரை... ஆளுநர் என்கிறது (லூக்கா 23:47)
- பத்திரிக்கை துறை இவரை... இவரே சத்தியம் என்கிறது (யோவான் 17:6)
- வக்கீல்கள் இவரை... மத்தியஸ்தர் என்கின்றனர் (1 தீமோ. 2:5)
- நாட்டாமை இவரை... ஆலோசனைக் கர்த்தர் என்கின்றனர் (ஏசாயா 9:6)
- கால்நடை துறை இவரை... பிரதான மேய்ப்பன் என்கிறது (1 பேதுரு 5:4)
- மருத்துவ துறை இவரை... இவரே பரிகாரர் என்கிறது (யாத். 15:26)
- சமுத்திர ஆராய்ச்சியாளர் இவரை... ஜீவதண்ணீருள்ள நதி என்கின்றனர் (வெளி 22:1)
- புகைப்படக்காரர் இவரை... தேவனின் சாயல் என்கின்றனர் (1 கொரி 4:4)
- கைதிகள் இவரை... விடுவிக்கிறவர் என்கின்றனர் (ரோமர் 15:26)
- விரிவுரையாளர்கள் இவரை... தேவனுடைய ஞானம் என்கின்றனர் (1 கொரி. 1:24)
- பாவிகள் இவரை... பாவிகளின் சிநேகிதன் என்கின்றனர் (எபி. 2:10)
- போர்வீரர்கள் இவரை... சமாதான பிரபு என்கின்றனர் (ஏசாயா 9:6)
- கல்வியாளர் இவரை... ஆசானே என்கின்றனர் (யோவான் 13:13)
- வேத வல்லுநர் இவரை... அபிஷேகிக்கிறவர் என்கின்றனர் (யோவான் 1:13)
- போக்குவரத்து துறையினர் இவரை... இவரே வழி என்கின்றனர் (யோவான் 14:6)
- விலங்கியல் துறை இவரை... யூதாவின் சிங்கம் என்கின்றனர் (வெளி. 5:5)
- கப்பல் பணியாளர் இவரை... இரட்சிப்பின் அதிபதி என்கின்றனர் (எபி. 2:10)

அவரின் பிறப்பை கொண்டாடும் நமக்கு.... இவர் யார்?

" கர்த்தராகிய கிறிஸ்து எனும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11)

இந்த அன்பின் இரட்சகரை பட்டணம் முழுவதும் பறைசாற்றுவோம்!1

# இயேசுவை அடையாளங் காணுதல்
# RECOGNIZING JESUS

கிறிஸ்துமஸ் கதைகளில் மிகப் பிடித்தமான ஒரு கதை என்னவெனில் வயதான செருப்பு தைப்பவர் ஒரு குறிப்பிட்ட கிறிஸ்துமஸ் மாலை வேளையில் இயேசு தன்னை அடுத்த நாள் சந்திக்க வருவதாகக் கனவு கண்டார். அந்தக் கனவு உண்மையானது. ஆகவே அது நிச்சயம் நடக்கும் என நம்பியிருந்தார்,

அடுத்தநாள் காலையில் அவர் எழும்பி தனது சிறிய செருப்புக் கடைக்குச் சென்று அதை அலங்கரித்து, எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து வைத்திருந்தார். இயேசு வருவார் என முழு நிச்சயமாய் நம்பி கடையில் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தார்.

ஒரு சில மணி நேரங்கள் கடந்தன. இயேசு வரவில்லை. ஆனால் ஒரு வயதான மனிதர் வந்தார். அவர் அந்த குளிர்காலத்தில் சற்று தனக்கு வெதுவெதுப்பு கிடைக்கும்படி கடைக்குள் நுழைந்தார். வயதான அந்த நபரோடு செருப்பு தைப்பவர் பேசிக்கொண்டிருக்கும்போது அவருடைய செருப்பு ஓட்டையாக இருப்பதைக் கவனித்தார். உடனே தனது கடையிலிருந்து அவருடைய காலுக்குப் பொருத்தமான புது ஜோடு செருப்புகளைக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தார்.

மறுபடியும் இயேசு வருவதற்காகக் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் இயேசு வரவில்லை. வயதான ஒரு ஸ்திரீ வந்தாள். அவள் இரண்டு நாட்களாகச் சரியான உணவு சாப்பிடவில்லை. ஆகவே அவளுக்காக நல்ல ஆகாரத்தைச் சமைத்துத் திருப்தியாகச் சாப்பிடச் கொடுத்து அவளை அனுப்பி வைத்தான்.

மறுபடியும் இயேசு வருவதற்குக் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் இயேசு வரவில்லை. அவருடைய கடைக்கு முன்பாக ஒரு சிறுபையன் அழுது கொண்டிருக்கிற சத்தத்தைக் கேட்டார். வெளியே வந்த அவனிடம் விசாரித்தபோது தனது பெற்றோரை விட்டுப் பிரிந்து வீட்டுக்குப் போவதற்கு வழி தெரியாமல் அலைவதைக் கண்டுபிடித்தார். அவருடைய மேலங்கியை அவனுக்குப் போர்த்தி அவனை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

அவர் திரும்பி தனது சிறிய செருப்பு கடைக்கு வரும்போது சற்று இருட்டிவிட்டது. தெருக்களில் ஆட்கள் நடமாட்டமில்லை. அவர் சோர்ந்துபோய் வானத்தை அண்ணாந்து பார்த்து “இயேசுவே நீர் ஏன் வரவில்லை” எனக் கேட்டார்.

அமைதியான நேரத்தில் ஒரு சத்தத்தைக் கேட்டார். “ஓ செருப்புத் தொழிலாளியே! உன் இருதயத்தைத் திற, மூன்றுமுறை உன் பாசக் கதவை நான் தட்டினேன். மூன்றுமுறை என் நிழல் உன் கடைவாசல் முன் விழுந்தது. நான் தான் ஒரு ஸ்திரீயாக வந்தேன். நீ எனக்குச் சாப்பாடு கொடுத்தாய். நான் தான் வழி தெரியாத சிறியவனாக வந்தேன். நீ என்னை வீட்டில் கொண்டுபோய் விட்டாய் என்றார்”

ஆம் மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்கிறீர்களோ, அதை இயேசுவுக்கே செய்கிறீர்கள்! (மத்தேயு 25:40).



# உங்கள் பிள்ளைகளைக் குறித்த தேவ திட்டத்தை புரிந்து கொள்ளுங்கள்

**Rev. பெகின் சாமுவேல் (AGCM Director)**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பரிபூரண ஜீவன் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துதலை தமிழ்ப் பிரதேச சிறுவர் ஊழியங்களின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவ சிருஷ்டிப்பில் மனிதன் மிகவும் விசேஷமானவன். ஒவ்வொரு மனிதனையும் தேவன் தாயின் கருவில் உருவாக்கும்போதே ஒரு திட்டத்துடன், தனித்துவம்மிக்கவர்களாக உருவாக்குகிறார். ஒவ்வொருவரும் மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்கள். தாலந்துகளில், கிருபை வரங்களில் நாம் விசேஷித்தவர்களாக உருவாக்கப்பட்டவர்கள்.

இவ்வாறே உங்களுக்கு தேவன் கொடுத்திருக்கும் பிள்ளைகளும் தேவத்திட்டத்துடன் உருவாக்கப்பட்டவர்கள். அவர்களைக் குறித்த அத்திட்டத்தை அறிந்து, அதை அவர்கள் வாழ்வில் நிறைவேற வைப்பதே நம்முடைய பிரதானமான கடமை. மாறாக, இன்று அநேக பெற்றோர் பிள்ளைகளுக்குள் தங்களுடைய திட்டத்தை திணிக்கிறார்கள்.

அதிகமான ஆசிரியர்கள் பள்ளிகளில் கல்வியாண்டின் முதல் நாளில் மாணவர்களிடம் கேட்கும் கேள்வி உன்னுடைய இலட்சியம் என்ன? அல்லது நீ என்ன ஆக விரும்புகிறாய்?. ஆம், பெரும்பாலான ஆசிரியர்கள் தன்னுடைய மாணவனின் திட்டத்தை அல்லது லட்சியத்தை அறிந்து வைத்திருப்பர். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளைக் குறித்த தேவதிட்டம் என்ன என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? வேதம் சொல்லுகிறது, கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். எபே 5.17. அதை அறிந்து செயல்பட உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

## தேவ திட்டத்தை அறிந்து கொண்ட பெற்றோர்

இயேசு கிறிஸ்துவின் பெற்றோராகிய யோசேப்பும், மரியாளும் தேவத்திட்டத்தை அறிந்து இயேசுவை வளர்த்தனர். தேவதூதனால் தன்னுடைய குழந்தையைக் குறித்த திட்டத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், தங்கள் சுயசித்தம் இயேசுவினுடைய வாழ்க்கையில் நிறைவேற அவர்கள் எதிர்பாராமல், தேவ சித்தம் நிறைவேறும்படியாய் பிள்ளையை அர்ப்பணித்து வளர்த்தனர். அந்த திட்டம் நிறைவேற அவர்கள் சுமார் 30 வருட காலங்கள் காத்திருந்தனர். அதனால் முடிவிலே அவர் உன்னதமானவருடைய குமாரன் என்றும், ஜனங்களை பாவங்களினின்று இரட்சிக்கும் இரட்சகராகவும் திகழ்ந்தார். தேவ திட்டத்தின்படி வளர்க்கப்பட்ட பிள்ளை எப்போதும் ஆசீர்வாதமான, பரிசுத்த பிள்ளையாக இருக்கும்.

## தேவ திட்டத்தை அலட்சியம் பண்ணின பெற்றோர்

யோசேப்பினுடைய வாழ்க்கையில் அவனைக் குறித்த தரிசனத்தை அவன் பெற்றோரிடம் கூறின போது அவனுடைய தகப்பன் அவனைக் கடிந்து கொண்டான். ஆனாலும் காலம் நிறைவேறின போது, யோசேப்பு தேவனுக்கு பயந்து

வாழ்ந்தபடியால், கர்த்தர் அவனைக் குறித்ததான தரிசனத்தை அவனுடைய வாழ்க்கையில் நிறைவேற்றினார்.

சிம்சோனின் பெற்றோருக்கு, சிம்சோன் தாயின் கருவில் குழந்தை உருவாகுமுன்னே அந்தப் பிள்ளையைக் குறித்து சகல திட்டங்களும் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. சிம்சோனின் தாய் தனக்கு சொல்லப்பட்ட காரியங்களை மிகவும் ஜாக்கிரதையாய் கடைபிடித்தாள். பிள்ளை சிறு வயதில் நசரேய விரதத்துடன் வளர்க்கப்பட்டது. ஆனாலும் சிம்சோனுக்கு அவனைக் குறித்ததான தேவ தரிசனங்களைக் குறித்து சரியான அறிவு போதிக்கப்படவில்லை. விளைவு, சில வருடங்களிலே தன்னைக் குறித்ததான தேவ திட்டத்தை விட்டு விலகிச் சென்றான்.

அன்பு பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளைக் குறித்து தேவன் ஏதேனும் திட்டங்களை உங்களுக்கு வெளிப்படுத்திருப்பாரானால், அதை பிள்ளைகளுக்கு ஜெபத்துடன் போதித்து வளருங்கள். ஏனெனில், தேவதிட்டத்துக்கு விரோதமாக நின்று நாம் ஜெயிக்க முடியாது. இந்த இரண்டு காரியங்களில் ஒன்றுதான் நம்முடைய பிள்ளைகளில் வாழ்க்கையில் கிறிஸ்தவ பெற்றோர்களாகிய நம்மால் செய்ய முடியும். ஒன்று, தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து ஒரு அர்ப்பணிக்கப்பட்ட, ஆசீர்வாதமான பிள்ளையை உருவாக்க முடியும். அல்லது தேவ சித்தத்தை சிதைத்து போட முடியும்.

ஒரு வேளை உங்களுக்கு தேவனுடைய திட்டம் என்ன என்று சரியான அறிவு இல்லையென்றால், உபவாசத்துடன் தேவனிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளையும் தேவன் ஜான் வெஸ்லி, பில்லி கிரஹாம் போன்ற எழுப்புதலான தேவ மனிதர்களாக மாற்ற முடியும். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.




## போட்டி எண் : 73 (சரியான விடைகள்)

(1).உன்னதங்களில்; (2).ஊன்; (3).கற்களை; (4).நாசியிலும்; (5).பிணம், கழுகு; (6).வைக்கோலாகவும், உளுத்தமாகவும்; (7)புழுக்களைப், தாயும், சகோதரியும்; (8).போதிக்கும்; (9).ஞானிகளாயிருக்கிற; (10).முத்துக்களைப் பார்க்கிலும்; (11).முன்னிலைமையை,பின்னிலைமையை; (12).சர்வ வல்லவர்; (13). மேட்டிமைகள்; (14).விளக்கு; (15).நீதிமானாய்; (16).சந்தோஷம்; (17).பரிதானம், அக்கினி; (18).தூளுக்குத் (19).ஞானிகளல்ல, நீதியை; (20).பாவிகளைப்; (21).சுவாசம்; (22).மலைப்பாம்புகளுக்குத், கோட்டான்களுக்குத்; (23).லிவியாதானை; (24). சிநேகிதர்; (25).நியாயம்.

## போட்டி எண் : 73 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை :** சொர்ணமதி; K.மஞ்சு; அமுதா; லீதியாள், G.முத்துகோபால்; சுமதி; ரோஸ்லின்; மாது; புஷ்பவள்ளி; கிரிஜா; சித்ராபிளஸ்சி; கலா; குளோரி; ராதாமணி; தமிழ்செல்வி;புனிதவல்லி; கந்தையா; கோகிலா; தங்கமணி; சுபா; டோரா; S.முத்துலெட்சுமி; K.விஜி; மரகதம்; A.மஞ்சு; S.ஜெயா; மாரிமுத்து தாவீது; கனகவல்லி; சாந்தி; ரம்யா; மகேஸ்வரி; |**ஸ்ரீவில்லிபுத்தூர்**: ஜெயராணி; பாஞ்சாலி; சுகந்திகலா; சொர்ணலஷ்மி; நித்யா; இவாஞ்சலின்; வந்தனா; டெய்சிராணி; ஜெஸிக்கா; ஷேரன்; டெரினா ஜெ.பியர்லின்; பிரீத்தி சுஷ்மா; பொன்கீர்த்தனா; மெசி; கிறிஸ்டி பிரியா; தேவபிரியா; ஆபிரகாம்; ஞானம்; யோகராணி; நெல்சன் செல்வராஜ்; விக்டர் பிரேம்; அபிநயா; அழகுநாச்சியார்; சித்ரகலா; ஜென்சி; ஷர்மிளா; அபிஷா; ஜெஸ்லின்; நிவேதா; அனிதா; மகதலேனா மரியாள்; கிரேஸி;| **வடக்கு ஆத்தூர்** : பிரைலா; ஜான்சி பிரிஸ்கில்லா; தங்கம்; ரைமன்ராஜ்; ரூத்பாக்யவதி; சாமுவேல்; சுகந்தி; ஷேரன்; ராஜசுலோசனா; அன்னக்கொடி; தேவராஜ்; குளோரி; பியூலா; பால்கனி; ராம்கி; டேவிஷா, ரெமில்டா; மகேஸ்வரி; பாவனா; பெவினா; முத்துவிஷ்வா;| **மதுராந்தகம்** : ஜான்பீட்டர்; தனலெட்சுமி; ஞானமணி; பிரிஸ்கில்லா; ஞானதெராசா; வேதமணி; நேசம்; பிரியா; ஜோஸ்லின்; சுந்தரி; புவனேஸ்வரி; அஞ்சுகம்; ஸ்டீபன்; ஜட்சன்பால்; சுனிதா ரோஸ்லின்; | **இடைப்பாடி** : ரூத்; ஜெபமேரி; பிரியா; வனிதா; லீதியாள்; எப்சிபா; அனுசுயா; பாக்கியம்; ரெஜினா விஜியா; அரசு அஞ்சலி; பிளஸி; | **ஆலங்குளம்** : ரோனா; ஸ்டெல்லா; பிளாரன்ஸ்; லதா; உமா ரோஸ்லின்; ரெஜினா சாரு; ரோஸ்லின்; ஜெயபால்; ஜெயபாரதி; | **கடையநல்லூர்** : நளினி; ஸ்டெல்லா; தங்கராஜ்; ஜெபசீதாலெட்சுமி; மேரிகுட்டி; ஆஷாதேவி; வினோலியா; தனம்; செல்வி இந்திராணி; |**மதுரை** : பால்; மேரி; லூயிஸ்கதிரேசன்; ஞானம்; கனிட்டா; ரவி; செல்வம்; பரிமளா; **தேனி** : ரவிபிரபா; மீனா; பூங்கோதை; அன்புகனி; லீலாவதி; திரவியச்செல்வி; கிருபா; கிறிஸ்டினா ரேகா; |**கூவத்தூர்** : ஹரிணி; தேஜாஸ்ரீ; கோபிநாத்; ரூத்; பிரிஸ்கில்லா; கௌரி; பாக்கியவதி; கெத்சியாள் வானதி; சாமுவேல்; |**தூத்துக்குடி** : பியூலா; சகாயமேரி; மதி; ஜமுனா; ஸ்டார்லினா; புரூசிமா; கில்வெஸ்டர்; சுதா ஜெயசீலி; |**திருச்சி** : சாந்தி; தனபாக்யவதி; தங்கலதா; ராஜேஸ்வரி; ஜெயசித்ரா; |**கொட்டாகுளம்** : ஜெபமேரி; ஏஞ்சல்ராணி; ஜான்சி ராணி; ரெஜினா; ரக்ஷனா; |**மடத்துகுளம்** : சோபியா; ஜீன் மெரிலின் கிருபா; பிரீத்தி; ஜாய்ஸ்மேரி; கிரேஸ்மேரி; | **பரமத்திவேலூர்** : திருசெல்வி; கவிபிரியா; பாமா; கௌசிகா; | **நாசரேத்** : தாசன்மோசஸ்; தேவகிருபை கலா; மேரி; எவான்ஜலின்; பரிபூரணம்; மெர்சி; | **அச்சிறுபாக்கம்** : டாரத்தி; தமிழ்செல்வி; குணசெல்வன், இலக்கியா;| **பெருங்குளம்**: ஜெயலின்; பியூலா; கிருஷ்ணம்மாள்; எப்சிபா; |**மம்சாபுரம்**: ஹெப்சிபா; பொன்னி; சில்வியா விண்ணரசி; ரேச்சல்;| **திருநின்றவூர்** : சுமதி; கேத்ரின்; எழிலரசி; ஏஞ்சலின் எப்சிபா; |**கிருஷ்ணகிரி** : ஐடா; தெபொரா ஆனிமெர்சி; ராஜன் பிரசன்னகுமார்; ரேச்சல் அனுசுயா; |**வந்தவாசி** : ஜூலியட்; நித்யா; அபிஷா சுமதி; ஜெனிட்டா; | **கிச்சிபாளையம்** : சாரோன் ஜெயரூபி; ஜெரின் ஜெயசீலி; கிறிஸ்டல் ஜான்; ராணி; **திருமழிசை** : ரெபெக்காள்; எஸ்தர்; கிருபா; சூரியகுமாரி;|**வீரபந்த்லான்பட்டணம்** :குவைன்னின்வாஷ்; லதா; ஜோஷ்வா தினகர்;| **பள்ளிக்கரணை** : ஜோதி; கீதா; கீதாமகேஸ்வரி; | **ஆண்டிபட்டி** : மேரி; இந்திராணி; புளோரியா; தேவபாக்கியம்; | **கோவில்பட்டி** : ஜெகதீஸ்வரி; அகிலா ஜாய்; | **புளியங்குடி** : சுந்தரி; ஜெயமணி; ஞானமணி; | **தர்மபுரி** : ரூத், ரமணி கிறிஸ்டினாள்; எஸ்தர்; | **வத்ராப்** : ஜெபராணி; அருள்செல்வி; கிறிஸ்டி; | **செய்யூர்** : எட்வர்ட்; விஜயா; பிரீத்தி; **ஆறுமுகநேரி**: கஸ்தூரி; எஸ்தர் வெண்ணிலா; பிரேமா; | **மலுமிச்சம்பட்டி** : ஸ்டெல்லா; ஜெமீமா ஏஞ்சல்; பிரிஸ்கில்லா; | **அந்தமான்** : விஜய்; ஜேக்லின்; சந்தியா; | **காளையார் கோவில்** :சத்யா; அருளானந்தம்; தனமணி; | **முத்தையாபுரம்** : மங்களம்; ஜீவிதா; காபிரியேல் அந்தோணி; | **காரைக்கால்** : உமா; ராஜாமணி; ரங்கசாமி; | **திருத்துறைப்பூண்டி** : சண்முகம்; மெர்லின் ஆம்புரோஸ்; ஆர்த்தி; | **மரக்காணம்** : சாராள் அறிவுச்செல்வி; பிரான்சினாள்; | **திருமங்கலம்** : இம்மானுவேல்; பாக்யம்; **நெய்வேலி** : மைதிலி; தெபொராள்; கண்ணன்; ஜேக்லின்மேரி; |

## போட்டி எண் : 73 (சரியான விடை எழுதியவர்கள்)...

**புதுச்சேரி**:குப்பம்மாள்; புரோனிக்கா;| **பேயன்விளை** : ஜாய்ஸ் மேரி; பானுமதி; |**சென்னை** : வினோலியா; பியூலா; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; தமிழ்மணி; |**கோயம்புத்தூர்** : கிறிஸ்டினா; அபிகாயில்;| **திருமுல்லைவாயில்**:ஜெனிபர்; தீபா; |**நத்தக்காடையூர்** : ஜோதி; பால்விக்னேஷ்; சைலி சுகன்யா; |**சாத்தூர்** : சரோஜா; மெர்ஸி; லாவண்யா; சங்கீதா;| **திசையன்விளை** : ராணி; ஜெயசீலி; | **திருவள்ளூர்** : ராகுல்; ஏஞ்சல் அனந்தகுமார்; மினி வசந்தம்; ஜெபகுமாரி ஆனி; | **தென்னூர்** : கிறிஸ்டி மகாலஷ்மி; ஜெய்சீலி; | **திருநின்றவூர்** : அம்மு; ஜஸ்டின் பீட்டர்; | **பெரும்பாக்கம்** : பியூலா; | **பொள்ளாச்சி:** அன்னபூமணிசெல்வி; | **சாயர்புரம்** : தேன்மொழி; டார்லிங்; | **தஞ்சாவூர்** :விஜி; யமுனா; | **பாளையங்கோட்டை** : மெரில் அலிஸ்; கீதா; | **வில்லியனூர்** : செல்லப்பன்; ஷீபா; | **புத்தூர்** : மேரிசுஜாதா; |**அரும்பாக்கம்** : ஜெனிட்டா தங்கராணி; | **தாம்பரம்** : விக்டர் மகேஷ்; |**நேர்குண்ரம்** : சாந்தி; | **ஓட்டேரி** : பியூலா; | **நாகமலை** : விஜி; ஹில்டா; | **மாக்கினாம்பட்டி** : டெய்சி; **சொக்கம்புதூர்** : நிர்மலா; |**அன்னதானபட்டி** : மார்கரெட்சைமன்;| **கோவிலாம்பாக்கம்** : எமீமாள்; |**நீர்முள்ளிகுட்டை** : சத்யா; | **செம்பாக்கம்** : மரகதலீலா; |**திண்டுக்கல்** : இன்சென்ஷியா; | **அஸ்தம்பட்டி** : பாலஸ்டீபன்;| **அரியலூர்**: அமுதா; |**உவரி** : ஜேனட்; | **நட்டாத்தி** : சரோஜா; |**பவுஞ்சூர்** : பிரேமலதா;| **வெள்ளோடு** : விசுவாசமேரி; | **அவினாசிலிங்கபுரம்** : கீர்த்தனா;| **தேனிமலை** : சுகுனா; | **K.T.C.நகர்** : பிரேமாரூத் : | **வீரபாண்டியபட்டணம்** : சுகிர்தா; | **வளையபட்டி** : ஜாயல் பெர்சிஸ்; | **அம்பா சமுத்திரம்** : லீலா; | **T.N. பாளையம்** : சுஜா; | **இடையன்குள**ம் : வயலட்மேரி; | **திருசெந்தூர்** : பியூலா; குளோரி; | **பெங்களூர்** : தேவபிரியா; | **களக்காடு** : வசந்தா; எப்சி அன்னாள்; | **பிள்ளையார்குப்பம்** : பூபாலன்; | **பாலசமுத்திரம்** : செல்வி; |**கடாட்சபுரம்** : ரேவதி;| **கீழஆசாரிபள்ளம்** : ஷியாமலா; |**தச்சூர்**: நந்தினி; **அம்பலவானபுரம்** :| நிர்மலா; | **சேத்துப்பட்டு** : ரெக்ஸி பெல்லா; அமலசெல்வி; | **இராமன்புதூர்** : லீதியாள்; | **ரெட்டிபாளையம்** : சுலோச்சனா; | **கும்பகோணம்** : மீனா;| **விருத்தாசலம்** : சுகிர்தா; | **சுரண்டை** : குளோரிஞானம்; | **ஆழ்வார்குறிச்சி** : ஹரிலீலா; தெபோராள்; | **கோணம்** : மரியநேசம்; | **ஆண்டாள்புரம்** : கற்பகவல்லி;| **மயிலம்** : வாணி; |**மாங்குடி** : பிரித்தி எலிசபெத்; |**திருநெல்வேலி** : சாந்தகுமாரி; விமலா; அல்போன்ஸ்; | **பெரியகுளம்** : ஜெபரோகிணி; **குருலிங்கபுரம்** : பொன்னுத்தாய்; | **புதுக்கோட்டை** : லலிதா; | **மேலபத்தை** : விமலாமேரி; | **கவுந்தபாடி** :ப்ரியா; | **அந்தநல்லூர்** : சாந்தி; | **கருங்குழி**; ஜமுனா; | **குரோம்பேட்டை** : தமிழ்செல்வி; | **பழனி**; பிரீத்தி; ஜெயபிரகாஷ்| **காமராஜபுரம்:** சிந்து; | **முக்காணி**; ஜெபன் சுந்தர்ராஜ்; |**கள்ளகுறிச்சி** : முருகன்; சத்யா;|**இராதாபுரம்** : செல்வபிரியா; **எட்டையாபுரம்**: ஆபிரகாம்; | **இறச்சகுளம்** : கிரேன்ஸி; | **வேப்பூர்** : சரோஜினி; **இறவாடி** : செல்விரவி; | **நச்சிகுறிச்சி** : சுகந்தி; | **திருக்கோயிலூர்** : டேரிஸ்; **காட்பாடி**; பால்பிச்சமுத்து; |**பழையகாயல்**: எலிசபெத்; |**ஆவடி** : ரூத் : **புதியம்புத்தூர்** : ராமசோபனா; | **ஏரல்** : ஜெயா; | **ஏர்வாடி** : மரகதம்; | **மட்டக்கடை** : பாத்திமா அன்டோ; | **சின்னாளபட்டி** : சலோமி; | **வெள்ளாளன்விளை** : சரஸ்வதி;| **பரமன்குறிச்சி** : செல்வி; | **மண்ணூ**ர் : ஆரோன்; |**நெய்யூர்** : ஷீலா;| **தாழையூத்து சங்கர் நகர்** : சகுந்தலா; |**ஓசூர்** : செல்வமணி ஸ்டெல்லா; | **அரசூர்** : ரோஸ்லின்; | **பொதும்பு**:ஜெயா; | **ஜலகண்டபுரம்** : ஜெயராஜ்; | **இடையர்பாளையம்** : மேரி:| **தாரமங்கலம்** : கிரேஸ்;| **திருவைகுண்டம்** : கெத்சியாள்; | **சிட்டலப்பாக்கம்** : தாமரைசெல்வி; | **நம்பியூர்** : சுகந்தி; | **களிஞ்சூர்** : கிருபாகரன்; | **பெருவிளை**: ஜெபராணி;| **கொங்கந்தான்பாறை** : சந்திரா.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 74

சங்கீதம் (1-50) அதிகாரங்கள் இருப்பிடத்துடன் விடை எழுதவும்.

1. எது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது?
2. கர்த்தர் யாரை சோதித்தறிகிறார்?
3. தேவன் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க எவைகளை கூப்பிடுவார்?
4. யாருடைய நாட்களை கர்த்தர் அறிந்திருக்கிறார்?
5. நாம் எப்படி கர்த்தரை சேவிக்க வேண்டும்?
6. எது மிகவும் அருமையாயிருக்கிறது?
7. எது துன்மார்க்கனை கொல்லும்?
8. கர்த்தருடைய சத்தம் எதை பிளக்கும்?
9. யார் புசித்து திருப்தியடைவார்கள்?
10. யாருக்கு வேதனைகள் பெருகும்?
11. யார் வாங்கின கடனை செலுத்தாமல் போகிறான்?
12. எது நிச்சயம்?
13. கர்த்தருடைய இரகசியம் யாரிடத்தில் இருக்கிறது?
14. யார் மீது குற்றம் சுமராது?
15. துதி செய்வது யாருக்கு தகும்?
16. தேவன் யார் மேல் நாள்தோறும் சினங்கொள்கிறார்?
17. யார் குற்றவாளிகளாவார்கள்?
18. எது புடமிடப்பட்டது?
19. யார் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்?
20. தேவன் எதை விரும்பி, எதை வெறுக்கிறார்?
21. யாருக்கு கர்த்தர் அடைக்கலமானவர்?
22. எதினால் எது கூப்பிடுகிறது?
23. யாருக்கு அநேக வேதனைகளுண்டு?
24. தேவன் நம்மை எதுவரையிலும் நடத்துவார்?
25. (1-50) அதிகாரங்களில் எத்தனை முறை பாக்கியவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது?

| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.12.2018 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |
|---|---|



### விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி


**"பரிபூரண ஜீவன்"**

**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**

A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809

செல்: 88077 18002

## ஊழியர் குடும்ப கொண்டாட்டம் – மதுரை







## மூப்பர் தலைமைத்துவ பயிற்சி பட்டமளிப்பு – மதுராந்தகம்





## மிஷனரி கன்வென்ஷன் – அம்பை, பெரியகுளம், கிருஷ்ணகிரி, கடலூர் மண்டலங்கள்










## மிஷனரி பயணம் – பஞ்சாப், உத்தரகாண்ட் மாநிலங்கள்





Registered News Paper Regd. No. 8206 / 62

## மாநில ஆண்கள் முகாம் – 2018









## ஆண்கள் முகாம் – திருப்பூர், கோவில்பட்டி மண்டலங்கள்









BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165